தண்டிகைக் காளியண்ணன் குறவஞ்சி



பதிப்பாசிரியர்கள்

புலவர் செ.இராசு முனைவர் கு.மகுடீசுவரன்

பவானி பாலபாரதி இயற்றிய

தலையநல்லூர்க் கூறைகுல
தண்டிகைக் காளியண்ணன் குறவஞ்சி

பதிப்பாசிரியர்கள்

புலவர் **செ. இராசு**, ஈரோடு

முனைவர் **கு. மகுடீசுவரன்**, கோபி

வெளியீடு

சிவகிரி ஆதீன அறக்கட்டளை,

சிவகிரி - 638 109.

ஈரோடு மாவட்டம்.

நூற்குறிப்பு

இந்நூல் சீர்வளர்சீர் சிவசமய பண்டித குருசுவாமிகள் மடாலயம் சிவகிரி ஆதீனம், கொங்கதேச சரித்திர கலாச்சார கேந்திரம், ஈரோடு, திரு. பாஸ்கர் M.B.A., திருமுருகன் பஸ் சர்வீஸ், சேலம் ஆகியோர் உதவியால் வெளியிடப்படுகிறது.

நூலின் பெயர்	:	**தண்டிகைக் காளியண்ணன் குறவஞ்சி**
நூல் பொருள்	:	இலக்கியம்
ஆசிரியர்	:	பவானி **பாலபாரதி**
பதிப்பாசிரியர்கள்	:	புலவர் **செ. இராசு**
		முனைவர் **கு. மகுடீசுவரன்**
பதிப்பு ஆண்டு	:	2015
நூலின் அளவு	:	14 செ.மீ. X 21 செ.மீ.
நூல் உரிமை	:	சிவகிரி ஆதீன அறக்கட்டளை
பக்கங்கள்	:	80
அச்சு எழுத்து	:	11 புள்ளி
விலை	:	ரூ.50/-
நூல் கிடைக்குமிடம்	:	சிவகிரி ஆதீன அறக்கட்டளை சிவகிரி - 638 109 ஈரோடு மாவட்டம் தொலைபேசி 04204 - 240124, 240324 9443563354, 9488263354 e-mail.sivagiriathinam@gmail.com
நூல் - அட்டை வடிவமைப்பு	:	வாழ்க வளமுடன் ஆப்செட் பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட் 29, நாச்சியப்பா வீதி II ஈரோடு - 638 001. போன் : 0424-2258511, 2258522

முன்னுரை

'தலையநல்லூர்க் கூறைகுல தண்டிகைக் காளியண்ணன் குறவஞ்சி' அடங்கிய ஓலைச் சுவடியைத் தேடிப் பெற்றுப் பாதுகாத்ததுடன் ஏடு பெயர்த்து எழுதியும் வைத்தவர் கொங்கு மண்டலப் பெரும்புலவர் எழுமாத்தூர் வேலம்பாளையம் வே.ரா. தெய்வசிகாமணிக் கவுண்டரவர்கள் (1903-1976). குண்டஞ் சென்னிய கவுண்டன் வலசுப் புலவர் வீட்டில் அவர்கள் சுவடி பெற்றார்கள்.

அவர்கள் மறைவிற்குப் பின் அவர் தேடி வைத்த ஓலைச் சுவடிகள், பெயர்த்து எழுதியவை ஆகியவை பேரூர் சாந்தலிங்கர் திருமடத்திற்கு அளிக்கப்பட்டன.

பேரூர் சாந்தலிங்கர் திருமடத்திலிருந்து இக்குறவஞ்சி அடங்கிய கையெழுத்துப் பிரதியைப் பெற்றுச் சென்றவர், பேராசிரியர் கு. அருணாசலக் கவுண்டர் அவர்கள். பேரூர்த் திருமடத்திலிருந்து தக்கை ராமாயணக் கையெழுத்துப் பிரதிகள் பெற்றுச் சென்ற போது இக்கையெழுத்துப் பிரதியும் அவருடன் சென்றது.

அவர்கள் மறைவிற்குப் பின் இப்பிரதி எங்களுக்குக் கிடைத்தது. திருவிழாவில் காணாமல் போன குழந்தை வந்து சேர்ந்தது போல மகிழ்ந்தோம். சில ஆண்டுகளாக இவற்றை அச்சிட முயன்றோம். சிலர் அச்சிட விருப்பம் தெரிவித்தும் அச்சாகும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.

கொங்கு மண்டலத்தின் தொன்மையான சிவகிரி ஆதீனம் 74ஆவது குரு மகா சன்னிதானம் சீர்வளர்சீர் சிவசமய பண்டித குரு சுவாமிகள் அவர்களும், 75ஆவது இளைய குரு மகா சன்னிதானம் சீர் வளர் சீர் சிவாகமத்திரு பாலமுருகன் ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் அவர்களும், ஈரோடு கொங்கதேச சரித்திர கலாச்சார கேந்திர

அமைப்பாளர் திரு. பொன் தீபங்கர் கி அவர்களும் இந்நூலைப் பதிப்பிக்க விரும்பி உதவி செய்தனர். அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி. சிவகிரி ஆதீன அறக்கட்டளை வெளியீடாக இந்நூல் வெளியிடப் படுகிறது.

இக்குறவஞ்சி ஏட்டுடன் தொடர்ச்சியாக இருந்த கூறைகுலப் பழனிக்கவுண்டர் திருமுகப்பா அம்மானை, அவர் மனைவி சின்னம்மன் மீது பாடப்பட்ட கலித்துறை, கூறைகுலப் பெருமக்கள் மீது பாடப் பட்ட பல தனிப்பாடல்கள் ஆகியவைகளும் இந்நூலில் இடம் பெற் றுள்ளன. அவற்றில் பல வரலாற்றுச் செய்திகள் உள்ளன.

பதிப்பில் உதவிய சிவகிரித் திருமடாலயச் சீடர் திரு. கே. சரவணன் அவர்கட்கு நன்றி உரியதாகுக.

கூறை குலத்தார் மட்டும் அல்ல, கொங்கு மக்களும், தமிழ் இலக்கிய ஆர்வலர்களும் இந்நூலைப் பெற்றுப் பயனடைய அன்புடன் வேண்டு கிறோம்.

ஈரோடு
16.01.2015

இலக்கியப் பணியில்,

புலவர் செ. இராசு

முனைவர் கு. மகுடீசுவரன்

குறவஞ்சி

குறவஞ்சி என்பது 96 தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று. அரசர், வள்ளல், தெய்வம், மக்கள் என ஒருவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு பாடப்படுவது. ஒரே யாப்பமைதியில் பாடப் பெறாமல் ஆசிரியப்பா, வெண்பா, கலிப்பா, வஞ்சிப்பா, விருத்தம் முதலிய பல பாடல்கள் விரவிப் பாடப்பெறும் நூல்.

பாட்டுடைத் தலைவரின் பன்முக மாட்சிகளும், அவர்கள் புகழும் முதற்கண் கூறப்பெறும். பாட்டுடைத் தலைவரின் நாடு, ஊர், அவர் உறவினர் ஆகியோர் கூறப் பெறுவர். தலைவர் சர்வ அலங்காரத்துடன் தன் பரிவாரம் சூழத் தெருவில் உலா வருவார். உலா வரும் காட்சியைக் கண்ட ஒரு பெண் உலா வரும் தலைவர் மீது காதல் கொள்வாள். அப்பெண்ணைப் பாட்டுடைத் தலைவி எனலாம்.

தலைவன் மீது கொண்ட காதல் நோயால் வருந்திய தலைவி தன்னை வருத்தும் தென்றல், நிலா. கடல், குயில், மன்மதன் ஆகியோரைச் சினந்து சில கூறுவாள். தோழியர் தலைவியின் காதல் நோய் தீர்க்கப் பல செய்கைகள் செய்வர். காதல் நோய் மிகுமே தவிரக் குறையாது.

அப்போது குறி சொல்லும் குறத்தி தெருவில் ‘கூவி’ வருவாள். தோழியர் குறத்தியை அழைப்பர். அவர்களிடம் குறத்தி தன் நாடு, நகர், மலை, தான் அறிந்த மலை, குறி சொல்லும் திறன், பெற்ற பரிசுகள் இவைகளைக் கூறுவாள். தட்சிணை வைத்துக் குறி கேட்கத் தொடங்குவர். குறி கேட்கும் சடங்குகள் நடக்கும். பாட்டுடைத் தலைவன் உன்னை வந்தடைவான் என்று குறத்தி குறிசொல்லித் தான் பெற வேண்டிய பரிசினைப் பெறுவாள்.

குறத்தியைப் பிரிந்த கணவன் குறவன் குறத்தியைத் தேடி வருவான். அவன் வேட்டையாடும் திறம் விரிவாகக் கூறப் பெறும். குறத்தியின் பெருமைகளையெல்லாம் கூறி அவளைக் காணவில்லையே என்று வருந்திப் புலம்புவான்.

இறுதியில் இருவரும் சந்திப்பர். குறத்தி தான் பெற்ற பல பரிசுகளைக் கூறி யார் யார் என்ன கொடுத்தார்கள் என்று கூறுவாள். இறுதியில் தலைவனை வாழ்த்துவர். இடையிடையே அநேகமாக எல்லா இடங்களிலும் தலைவன் பெயரும், சிறப்பும் கூறப்பெறும். சில குறவஞ்சிப் பாடல்கட்கு இசை வகுக்கப்பட்டிருக்கும்.

இந்நூலின் காலம்

தலையநல்லூர் வரதராசப் பெருமாள் கோயில் கருவறை தென் சுவர் மற்றும் அதிட்டானப் பகுதியில் வெட்டப்பட்டுள்ள கல்வெட்டில் ''இந்த தன்மம் தலையநல்லூரிலிருக்கும் கூறைகுல கோத்திரத்தில் தண்டிகைக் காளியப்ப கவுண்டனுக்குப் பேரன் செங்காளியப்ப கவுண்டன் உபயம் கெற்பக் கிரகம் அர்த்த மண்டபம்'' என்ற தொடர் காணப்படுகிறது. இந்தக் கல்வெட்டின் காலம் கி.பி. 1710. எனவே இக்குறவஞ்சி பெற்ற தண்டிகைக் காளியண்ண கவுண்டர் கி.பி. 17 ஆம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில் வாழ்ந்திருக்கலாம். இந்நூல் பாடப்பட்ட காலமும் அதுவேயாகலாம்.

பொருளடக்கம்

1.	தண்டிகைக் காளியண்ணன் குறவஞ்சி	1
2.	கூறைகுலத் தண்டிகைக் காளியண்ணன் மீது தனிப் பாடல்கள்	38
3.	காளியண்ண கவுண்டர் செய்த புலவர் நியமனம்	39
4.	கூறைகுலப் பழனிக்கவுண்டர் மீது கொல்லபட்டப் புலவர் பாடிய திருமுகப்பா அம்மானை	41
5.	தலையநல்லூர்க் கூறைகுல நாட்டிமைக் குமார சின்னைய கவுண்டர் பேரில் தனிப் பாடல்கள்	63
6.	தலையநல்லூர்க் கூறைகுலப் பழனிக்கவுண்டர் பேரில் விருத்தம்	69
7.	கூறைகுலப் பழனிக் கவுண்டர் மனைவி சின்னம்மன் பேரில் கலித்துறை	71



தலையநல்லூர்க் காணியாளர்கள் குலதெய்வம்

அருள்மிகு பொன்காளியம்மன்



இந்த நூலுக்குரிய ஓலைச்சுவடியைத் தேடிப் பாதுகாத்துப் பெயர்த்தெழுதிய
தலையநல்லூர்க் கூறைகுலச் செம்மல்

பெரும்புலவர் **வே.ரா.தெய்வசிகாமணிக்கவுண்டர்**

(15.12.1903 - 22.10.1976)

1. தண்டிகைக் காளியண்ணன் குறவஞ்சி

விநாயகர் காப்பு

புகழ்மேவும் கூறைகுலோத் துங்க நேயன்
புண்ணியவான் செங்காளி புதல்வன் ஆனோன்
சுகமோக நாகரிக மதன ரூபன்
தூயன்உயர் காளிமகி பாலன் மீது
செகமோக திலதமெனத் தமிழ்ப்ர பந்தம்
தெய்வக்குற வஞ்சிதனைத் தெளிந்து பாட
அகமேவு ஞானமதம் பொழியும் மூத்த
அய்ங்கரன்பொற் பங்கயத்தாள் காப்ப தாமே. 1

நூல் தலைவர் காளியண்ணன்

திக்கெலாம் புகழும் கூடல் திருமலை நரேந்திரன் மெச்சும்
விக்கிரமா தித்தன் என்னும் விளங்குசெங் காளி மைந்தன்
மிக்கவே உலகம் எல்லாம் விளம்புபைந் தமிழின் மாலை
சொற்குற வஞ்சி கேட்கும் துரைகாளி வாழ்க என்றே! 2

நூலாசிரியர் பாலபாரதி

சீராளன் புகழும் தஞ்சை செஞ்சிஆர்க் காடு மட்டும்
பேராளன் உயர்செங் காளி பெற்றருள் மைந்தன் மீது
பாராளர் புகழும் வால பாரதி பாடல் செய்தான்
காராளர் குலத்தில் காளி கனராசன் வாழ்க என்றே! 3

தெய்வங்களைப் பணிவோம்!

தரு

[நாட்டை]

உலகமுழு தும்புகழ் தென்தலைசை நகரதிகாரன்
    ஓங்கியசெங் காளிஅருள் தோன்றல்மகா ராயன்
பலகலை தெரிந்தசொல் காளிபூ பாலன்மேல்
    பாட்டிலுயர் குறவஞ்சி நாட்டியவகை பாட
கலியுக வரதராசர் கமலைகலை வாணியொடு
    கவுரி உமைபாகர் நாகீசர் தேசிகரே
திலகமென விரவுசிவ கிரியில்வடி வேலவரைச்
    சிந்தையில் நினைந்தலர் சொரிந்துபணி வோமே! 4

- செய செய

ஆகம கலைஞான சிவசமய பண்டிதர்
    அன்புபெறு தேசிகர்க்கு அருள்சீடன் ஆனோன்
நாகரிகன் உபகாரன் காளிபூ பாலன்மேல்
    நலமான குறவஞ்சி நாடகத்தைப் பாட
சீகரம் உலாவுதிரை மோதுகா வேரிசூழ்
    தென்கறைசை மகுடேசர் வீரநா ராயணன்.
கோகனக வேதன்மலை மாதுவடி வம்மனைக்
    குறித்தனு தினம்தொழுது புகழ்ந்துபணி வோமே! 5

- செய செய

மங்களம்

செயசெய மங்களம் மதுர வாசகனுக்கு மங்களம்
தலைசைவரு காளி பூபனுக்கு மங்களம்

அதிவீர ராமனுக்கு அனதான சோமனுக்கு
அரையநா டதிகார அதிபனுக்கு
மதிமுக சீலனுக்கு மகராச யோகனுக்கு

வசனப்ர தாபனுக்கு மங்களம்
மதுர வாசகனுக்கு மங்களம் 6

தரும சொரூபனுக்கு சரசசல் லாபனுக்கு
தருமன்செங் காளிபூபன் தனயனுக்கு
மன்மத ரூபனுக்கு வளர்கூறை குலனுக்கு
மகிபால லோலனுக்கு மங்களம்
மதுர வாசகனுக்கு மங்களம்

தலைசைவரு காளி பூபனுக்கு மங்களம். 7

வேறு தரு

கங்கா குலனே விசயீபவா செய
காளி மகீபா விசயீபவா

வங்கணர் தொழுவர் தெலுங்கர் புகழவரு
கொங்குவே ளாளவற் களங்கப்ர சங்கசெய (கங்கா)
பாட்டில் வளம்பரவும் தாட்டிகன் மேல்அரைய
நாட்டில் இனிமைபெற நாட்டிமை செய்யும்துரை

கங்கா குலனே விசயீபவா செய
காளி மகீபா விசயீபவா. 8

கட்டியக்காரன் வருகை

விருத்தம்

மதிநுதல் திலதம் திட்டி வரிசையாய்ப் பாகு கட்டி
புதியசவ் வாது பூசிப் பொன்கையில் பிறம்பு கொண்டு
சதிர்பெறும் காளி பூபன் சமுகரஞ் சிதங்கள் கூற
கதிர்பெறும் சபையில் கட்டியக் காரனும் தோன்றி னானே.
9

கட்டியக்காரன் கூற்று

தரு

கூறைகுல ராசகெம் பீரா பராக்கு
கொங்குபுகழ் தலையநல் லூரா பராக்கு

மாறா உதாரசிங் காரா பராக்கு
வாகான செங்குவளை மார்பா பராக்கு
சேரலர் பணிந்திடும்வ சீரா பராக்கு
செங்காளி ராயன்கு மாரா பராக்கு
காரிடர் தவிர்த்தஉப காரா பராக்கு
காளியண தீரஅ மீரா பராக்கு. 10

பொன்காளி அருள்பெறும்வை போகா பராக்கு
புலவோர்கள் புகழும்வச்ர திரேகா பராக்கு
மங்கையர்கள் மடல்எழுதும் மதனா பராக்கு
மறுமன்னர் பணிவீர மன்னா பராக்கு
கங்கைகோத் திரத்தினில் கர்னா பராக்கு
கனதன குபேரசம் பன்னா பராக்கு
துங்கா துரங்கரே பந்தா பராக்கு
துரைகாளி யணராய சுந்தரா பராக்கு. 11

ராசாதி ராசபர மேசா பராக்கு
ரணசிங்க விசயமுரு கேசா பராக்கு
தேசாதி தேசதிறை யாளா பராக்கு
தென்சோழர் சேரர்புக ழாளா பராக்கு
பூசுரர்சொல் மாலைபுனை பூபா பராக்கு
பூபாலர் புகழும்இந்திர போகா பராக்கு
காசிஇம சேதுமட்டும் பேரா பராக்கு
காளியண தீரஅ மீரா பராக்கு. 12

எச்சரிக்கை

வேறு தரு

சோடாரும் இலாயோக சுசீலா எச்சரிக்கை
துரைராசர்கள் மகிழ்வாகிய சுமுகா எச்சரிக்கை
தாடாள வசீரசம்ப்ர தாயா எச்சரிக்கை
தமிழ்சேர்சிவ கிரிவேலவர் சரணா எச்சரிக்கை

வாடாமலர் நிறைசந்திர வதனா எச்சரிக்கை
மடமாதர்கள் மயல்மீறிய மதனா எச்சரிக்கை
நாடாதிபன் கூறைகுல நாதா எச்சரிக்கை
ராசாதிபன் காளியண ராயா எச்சரிக்கை. 13

காளியண்ணன் வருகை

தாழிசை

மேரு லாவுமதிள் கோபு ரங்கள்மணி
மேடை மாடநெடு வீதியில்
மேக தோரணம் உலாவும் மேலரைய
நாட்டில் வாழ்தலைசை யூரிலே

தாரு லாவுமறை யோர்கள் ஆசிமொழி
சாற்ற நாவலர்கள் போற்றவே
தான மத்தளம் மலாரி கொட்டுதவில்
தாரை நாதசுரம் ஊதவே

ஏரு லாவுகுழல் மாதர் ஆடவும்
இசைந்த முத்தமிழ்கள் பாடவே
இனிமை சேர்கவரி வீச வெண்குடை
இரட்டியே விருது கூறவும்

காரு லாவுகொடை யாள சீலசெய
காளி பூபமக ராசமால்
கனக தண்டிகையின் மீதி லேபவனி
வரும் அலங்கிருத விநோதமே! 14

காளியண்ணன் பவனி வருதல்

தரு

பவனி வந்தனனே - தண்டிகை மீதில்
பவனி வந்தனனே

குவல யம்புகழ் கூறை கோத்திரன்
தலைசை யனுகூலன் செங்காளி அருள்பாலன்
கருணைஞானச் சிவசமயபண்டித குருவைப் பணியும்
நித்திய தியாகன் சவுரிய மகாயோகன்
காளியணேந்திரன் பவனி வந்தனனே. 15

குலவும் மின்இடையில் சல்லடம் தொட்டு
தலையில் பொன்சரிகைப் பாகுடன் கட்டு
இலகிய நுதலில் சிந்துரப் பொட்டு
குலவிய கடுக்கன் காதினில் இட்டு
கோலக் களபராசி மேலுமிகப் பூசி
குவளைப் புயம்இலங்க நவரத்னம் துலங்க
தாலம்புகழ் தேவேந்திர கோலாகல வைபோக
சகல சம்பிரமாக மகிபன்
காளியணேந்திரன் பவனி வந்தனனே. 16

கொம்பு கைத்தாளம் தவில்முரசு பம்பை
எக்காளம் பூரிகைபேரி இன்பமத்தாளம் தொனிமுழங்க
தென்புயர் ஈழம் கொங்கணம் சீனர்குடகர்
கெவுடர் வடதிசை நரபதி புகழ
கொங்கு வேளாளர்எனும் தமிழ்நாவலர் பாட
நடனமாதர்கள் ஆட விருதுகட்டியம் கூற
நளினமிகு தலைசைநகரில் காளிய ணேந்திரன்
பவனி வந்தனனே - தண்டிகை மீதில்
பவனி வந்தனனே. 17

மோகனாங்கி வருகை

விருத்தம்

கட்டழகி ஒய்யாரி காம ரூபி
கலைவாணி அயிராணி கனக வள்ளி
சிட்டர்மனது உருக்குமனு ராக ராசி
தெவிட்டாத செழுந்தேறல் தெய்வ ரம்பை

அட்டதிசை புகழும்மேல் அரைய நாட்டில்
அருள்காளி பூபாலன் பவனி காண
இட்டமுடன் அதிமோக முற்ற வஞ்சி
இந்திரைபோல் சபையில்வந்தாள் இசைந்து தானே. 18

தரு

மாமோக னாங்கி வந்தாள் - மயில்போலவே
மாமோக னாங்கி வந்தாள்

பூமன் தலைசைநகர் புரக்கும்பைங் காவிமலர்த்
தாமன்செங் காளிபூபன் தனயன் காளிமகீபன்

கொந்தலரின் பூச்செண்டு கொண்டுமெய் கள்துவண்டு
வந்தவா யிலும்கண்டு மன்னவன் எதிர்கொண்டு - மாமோக

கொந்தளச் செம்பொன்ஓலை குளிர்ந்த முத்துமாலை
சந்திர காவிச்சேலை தரித்த சித்திரமாலை

முத்து வடங்கள்பூட்டி முகவசீ கரங்கள் காட்டி
சித்தசன் சூட்டி செய்து வரும்சீ மாட்டி - மாமோக

அந்தமிகக் கண்காட்டி அனுபவங்கள் பாராட்டி
கந்த மலரைச்சூட்டி காளிமகீபன் நாட்டில்

மாமோக னாங்கி வந்தாள் - மயில்போலவே
மாமோக னாங்கி வந்தாள். 19

விருத்தம்

சந்தனக்குங் குமகளப ராசி பூசித்
தவளவடம் துவண்டலுங்க தரித்து வாசக்
கந்தபொடி திமிர்ந்துபல பணிகள் பூண்டு
கதித்தெழுந்து நிமிர்ந்துமுலைப் பாரம் ஓங்க
நந்துசிறு மருங்கசையச் சிலம்பு கொஞ்ச
நரராசர் பின்தொடர நாக ரீகச்
சந்திரவிழி நுதல்மடந்தை தனக்குப் பாங்கி
சங்கீத கோகுலம்போல் தனிவந் தாளே. 20

பாங்கி வருதல்

தரு

சுந்தரப் பாங்கி வந்து தோன்றினாள்
கந்தவேள் நிகரான காளிபூபன் நாட்டில் (சுந்தர)

கட்டழகும் கனசிங் காரமும் நுதலில்
இட்ட சுட்டியும் தனபாரமும் வெகு
நட்டணையும் நடையும் பட்டுடையும் இடையும்
மட்டுமீறி மென்மேலே மங்கைதெய்வ ரம்பைபோலே. (சுந்தர)

21

சரசசல் லாபநயப் பார்வையும் - தனம்
சற்றே தெரியவிட்ட போர்வையும் - மதி
விரக விகாரமும்கைச் சரசஒய்யாரமும் - கண்டு
உருகி உள்ளம்பதைக்க உத்தமர் மனம்திகைக்க
மட்டுமீறி மென்மேலே மங்கைதெய்வ ரம்பைபோலே. (சுந்தர)

22

வேறு தரு

விந்தை சிறந்திடவே - ரஞ்சித
வேடிக்கைப் பாங்கி வந்தாள்

ஐந்தரு வுற்றருள் கைத்தல லோலன்
அரையநாடன் காளிபூ பாலன் களிக்க
ஆசை தழைக்க வாசம் செழிக்க (விந்தை)

சந்திரோ தயம் எனவே மெய்மீதில்
தங்கப் பணிகள் மின்னவே
அந்த மிகுந்தொளிர் பந்து கிளர்ந்தும்
அறிந்தச் சிறந்தெழு கின்றது போலே
நடஞ்செய லாலே மடந்தை மின்போலே (விந்தை)

கொங்கை குலுங்கிடவே கோமளக்
கூந்தல் சரிந்திடவே

அங்கசன் இங்கித வங்கன மொன்றி
மயங்கித் தியங்கி
மனங்குழை வாக வனிதை வைபோக
வருநாக ரீக. (விந்தை) 23

மோகனாங்கி வருத்தம்

விருத்தம்

மருவிருக்கும் குவளையணி செங்காளி பூபனருள்
மைந்தன் ஆனோன்
தருவிருக்கும் கரதலவான் காளிமகி பாலனுயர்
சரச லோலன்
அருள்சுரக்கும் பவனிவரும் அலங்காரம் கண்டுமனத்து
ஆசை கொண்டு
திருவிருக்கும் திருவனையாள் தனியிருக்கும் வருத்தவகை
தெரிகின் றாளே. 24

காளியண்ணன் பவனியை மோகனாங்கி காணல்

தரு

பவனி கண்டேனே - என்னாளும்
கவலை கொண்டேனே

குவல யம்புகழ் தலைசை யம்பதி
கூறை குலாதிபன் காளி மகீபதி (பவனி)

உற்றது சொல்வேனோ மனத்துயர் உள்ளது சொல்வேனோ
கற்றது பாடேனோ கண்டுகை கலந்து கூடேனோ

இனியென் தனிமை தீரேனோ முந்துற்று நேரானோ
அணைந்து என் மோகம் தீரானோ

விந்தைக் குள்ளாளன் வசந்தத் தியாகிமெய்
சிந்திக்கும் காளிமகீப சுசீலன் விசாலன் பூபாலன்
பவனி கண்டேனே - என்னாளும்
கவலை கொண்டேனே. 25

மோகனாங்கி பாங்கியை வினவல்

காதல் வெள்ளப் பெருக்காலே
கேத மாகுது ஒருக்காலே - என் மின்னே

இந்தக் கங்குலும் வெடியுதில்லை
பங்க மாகுதென் தொல்லையென்னே - என் மின்னே

ஆதரவு வேறேதும் காணேனே
ஏதேதோ சஞ்சலம் ஆனேனே - என் மின்னே

இப்ப அரையநா டாதிபன்
வந்து மருவுவானோ என்னையே - என் மின்னே

ஊரோடு அலர் கவுர்ந்தானே
பேராசை கொண்டேனே நானே - என் மின்னே

சற்றுமுற்ற பகையெல்லாம் வென்று
சற்றேகண் பாரானோ நின்று - என் மின்னே

தலைசை யதிபன் காளிபூபன் மோடி
ஆன தென்ன சொல்லடி - என் மின்னே. 26

மோகனாங்கியைத் தென்றல் வருத்துதல்

வேறு தரு

மந்த மாருதமே நீவருத்த லாமோ - நான்
மையலா னேனென்று தவறுசெய்ய லாமோ
சிந்தனை வெதும்புதே குளிர்ந்துவீசாய் சிறு தென்றலே
பெண்சென்மம் என்று நன்றி பேசாய்

எத்தனை சொன்னாலும் மனதில்லை யாச்சே
சரியொத்த பெண்கள்முன் வேறென்ன பேச்சே
சித்தசன் செங்காளி மகிபாலன் தேடி - வந்து
மெத்தையில் சேரானோ முத்தந்தந்து கூடி. 27

மோகனாங்கியை நிலவு வருத்துதல்

வேறு தரு

வெண்ணிலாவே வெண்ணிலாவே

வேறெண்ண லாமோ நானோர் பெண்ணலாது
வேறல்லவே வெண்ணிலாவே

சித்தசன் கணைத்தம வெண்ணிலாவே - என்கண்
நித்திரை வருகுதில்லை வெண்ணிலாவே

அங்கனோர் வந்து தங்கு கிரணமெல்லாம் - உடல்
எங்கும் தழலுக்குத் தவிக்கவிட்டாய் வெண்ணிலாவே

பெண்ணொடு பிறந்தும் உடல் வண்ணமாகியும் -ஓர்
தண்ணளியை ஏன்மறந்தாய் வெண்ணிலாவே

ஆளழ கன்துரைக் காளிமகிபாலன் - என்னை
வாழவுடன் சொன்னா லென்செய்வாய் வெண்ணிலாவே. 28

மோகனாங்கியை குயில் கூவி வருத்துதல்

வேறு தரு

மதன காளக மானகுயிலே - அதிக
மோகமங் கையருடன் வாதோ குயிலே

கனமாய்க் கூவுகிறாய் குயிலே - மதன
விரகமதிக மாகுதே கருங்குயிலே

கங்குல் வெடியுதில்லை குயிலே - சற்றாகிலும்
கண்ணுறங் காதது ஏதோசொல் குயிலே
திங்களும் காயுதே மாங்குயிலே - மலையாசலத்
தென்றலும் பாயுது பூங்குயிலே

அஞ்சிடச் செய்யாதே சிறுகுயிலே - இவ்வேளையெனை
ஆதரித் திடவேணும் குயிலே
தஞ்சமுனை நம்பினேன் குயிலே - உன்னையும்
பெற்றதாய்க்கு உதவாத சின்னக் குயிலே

விரைவுடன் கூவாதே நீகுயிலே - பாழுமனமும்
வெறுப்பாகி னேனிதென்ன குயிலே
அரையநா டாதிபன் காண்குயிலே - தலைசைக்
காளியண ராயன்வரக் கூவாய் குயிலே. 29

மோகனாங்கியைக் கடல் வருத்துதல்

வேறு

சித்தசன் வெற்றி முரசொலி மீறிய கடலே - பூமா
தேவியின் கோசிக மானபெயர்ப் பெருங் கடலே
நத்துல வும்திரை பெற்ற சலராசக் கடலே - எந்த
நாளும் குறையாமல் நீளும் தமனியக் கடலே

நாடுவோர் உன்னையும் தேடரி தாகிய கடலே - நவ
ரத்தினக் கெற்பம் விளைத்தொலி சீரிய கடலே
கோடான கோடி கப்பல் உலவும் கருங்கடலே - சிறு
கோதையர் மீதினில் வாதிட நீதியோ கடலே

வடவாமுக உதயங்கள் எனவரும் கடலே - திரு
மாது மதிபெற்றும் குரோத மதியென்ன கடலே
கொடுமையாய்ச் சீறுகி றாய்மட மாதர்முன் கடலே - காள
கூட இடம்பிறந் தேகுண மாம்அன்றோ கடலே

ஊளிநூல்ப் பொய்யோம் மின்னார் முனிவரால் கடலே - முனி
உண்டுமிழ்ந் தேயுவா கொண்டழுந் தாய்அலை கடலே
காளி யணதுரை ராசன் வசீகரன் கடலே - வந்து
கண்டெனைக் கூடினால் உன்தொனி என்செயும் கடலே. 30

மோகனாங்கியை மன்மதன் வருத்துதல்

வேறு

வீரவாளி தொட்ட தேது வெற்றிவேளே - எந்தன்
மீதோராச காரியமோ வெற்றிவேளே
தாரிபாரி யில்லையோடா வெற்றிவேளே - இது
தர்மமோ என்மேல் வர்மமோ வெற்றிவேளே

சல்லடைக்கண் போலானேன் வெற்றிவேளே - இனிச்
சற்றும்சித்தம் இரங்காதோ வெற்றிவேளே
வில்லெடுத்த போதேவேட ரூபமாமோ - இது
வீண்போமோ பெண்பழியன்றோ வெற்றிவேளே
அருவமாய்உன் ஆற்றல் பெற்றாய் வெற்றிவேளே - உனைப்போல்
ஆருங் காணேன் பூரை கண்டாய் வெற்றிவேளே
கருதலர்கள் சிங்கம்எனும் வெற்றிவேளே - துரைக்
காளியணைந் தால்என்செய்வாய் வெற்றிவேளே. 31

குறத்தி வருதல்

விருத்தம்

திங்களும் கங்குலும் தீர வேட்கும்
　　தென்றலுக்குங் கன்றிமெத்த மோக னாங்கி
மங்கையர்க்கு ளங்கிருந்து வருந்தும் போது
　　மகராசன் கூறைகுலன் காளி பூபன்
துங்கன்வெற்றி தரும்அரைய வளநன் னாட்டில்
　　துரைராசர் ராசஉல் லாச கேளி
வங்கணச்சிங் கனுக்குஇனிய காம ரூபி
　　மாதுகுற வஞ்சிவந்து தோன்றி னாளே. 32

காளியண்ணன் தசாங்கம், உறவுகள்

அகவல்

தரையெலாம் அளந்த கரியமால் முகுந்தர்
சரணதா மரையை உறுதியாய்த் துதிப்போன்
நலமிகு மகுடா சலம்எனும் வரையான்
நிலமைகொள் மயிலோன் பொலிசிவ கிரியான்
வட்டமிட்டு உயர்வான் மட்டுமுட் டியதோர்
மட்டிலாப் பொழில்சூழ் எட்டிவெற்பு உடையோன்
வெய்யவே கமும்மிகும் நொய்யலாறு உடையோன்
வையமேற் பரவும் செய்யகா விரியான்

கரையிலா வளமும் புரையிலாப் புகழும்
விரவியே மருவும் அரையநன் னாடன்

மலர்அசைந் தாடும் பலசெழுங் காவும்
சலமங் கையும்நீள் தலைசையம் பதியான்

உற்றசஞ் சரிகம் கற்றபண் பயிலும்
பெற்றசெங் குவளை வெற்றியைந் துடையோன்

அடையலர் மகுட முடிபட உருட்டிப்
பொடிபட மிதிக்கும் நடனவெம் பரியான்

உததியுள் அடங்கிக் கொதிபடப் பிளிறும்
கதமிகு தறுகண் மதகயம் உடையோன்

மகிக்கதி பதியென்று உகப்புடன் எவரும்
நிகழ்த்திடு மேழித் துகிற்கொடி படைத்தோன்

குணகடல் போல ரணகள பேரி
கணமுடன் அதிரும் மணிமுரசு உடையோன்

ஆட்சியாய் வரும்பஞ் சாட்சர முறைமை
மாட்சிமை தெரிந்த காட்சிநன் னெறியான்

திருந்துமும் முதல்வர் நிரந்தர மகிழ்ந்து
பொருந்துதென் கறைசைப் பெருந்தலம் உடையோன்

நள்ளிருள் தன்னில் வெள்ளிவெண் முளையால்
உள்ளமெய்ப் பொருட்குத் தெள்ளமுது அளித்தோன்

பணியிடத் திருக்கும் மணிபறித்து எடுத்தோன்
கணிதமிட்டு எவர்க்கும் அணிபெறக் கொடுத்தோன்

பாக்கியவான் எனுமோர் காக்கைவா ரியின்மால்
வாக்குப தேசம் ஆக்கநல் வழியான்

மேவுபொன் காளி தேவியின் பாதம்
தாழ்விற்சிந் தனையில் பாவனை புரிவோன்

சொன்னசொல் தவிரான் மன்னன்முத் தமிழ்சேர்
சின்னபூ பதிக்கு முன்னவன் ஆனோன்

சித்தச ரூபன் உத்தம சீலன்
முத்தண பூபன் மெய்த்துணை யானோன்

மயிலபூ பதிமுன் உயர்சகோ தரவேள்
இயல்கொள் செங்காளி புயலின்முன் ஆனோன்

பார்த்திபற்கு இனிய வார்த்தைகள் புகல்வோன்
கீர்த்திசேர் கூறை கோத்திரப் பெரியோன்

தொழுதுணக் கருதான் பழிதனைப் பகரான்
உழுதொழில் அதற்கே விழைவுறு மனத்தான்

சின்னயன் காளி மன்னன்பொன் காளி
பின்னவன் வேலன் இன்னவ ருடனே

தீரமுற் றருள் குமாரசின் னையனும்
சீர்சிறந் துதிக்க வாரமுற் றெடுத்தோன்

இங்கிதத் துரையாய் மங்கையர்க்கு அழகாய்
இங்குவந்து உதித்த கங்கையங் குலத்தான்

நாட்டமுற் றெவரும் கூட்டமிட் டிடவே
நாட்டிமை செலுத்தும் தாட்டிக முடையோன்

பற்றலர் பணியும் வெற்றிவே ளாளன்
உற்றபேர்க்கு இதமாய்க் கற்றகா ராளன்

மதனசிங் காரன் அதுலகெம் பீரன்
உதயமந் தாரன் சதுரசற் காரன்

ஆளிலே அழகாய் நாளிலே துடியாய்
நீளுநீள் புகழ்சேர் காளிபூ பாலன்.

குறத்தியின் தோற்றம்

பொருப்பினில் மயில்போல் உரைப்பரும் குயில்போல்
உரைத்தெழும் பிடிபோல் பொருந்துமென் நடையும்

கூந்தலும் துடியும் தேய்ந்தசிற் றிடையும்
வாய்ந்தபட் டுடையும் ஆய்ந்துமே எடுத்த

தரித்தபூ சணமும் உரைத்தவா சகமும்
வருத்தத் தோதகமும் சிரித்த வாள்முகமும்
முகவசீ கரமும் சுகமனோ கரமும்
மிகுகுணா கரமும் சகலசே கரமும்
மாத்திரைச் செறிவும் வேத்திரக் கரமும்
காத்திரத் தழகும் தோத்திரப் பிரியமும்
எவற்றையும் மயக்கிக் கவலைகள் தணிக்க
நவகுறக் கூடையும் உவகையின் இடுக்கி
மருக்கமில் தலைசைத் தெருத்தொறும் நடந்து
கருத்துள மகிழ்ந்து வருத்தமுண் டவர்கள்
அறிக்கைகண் டறிந்து குறிப்புடன் உகந்து
திறத்திறம் புகலும் குறத்திவந் தனளே. 33

குறத்தி வந்தாள்

தரு

வஞ்சி வந்தாள் - மோகனக் குற
வஞ்சி வந்தாள்

வஞ்சி தோதகி மிஞ்சி வாழப
ரஞ்சி மோகன ரஞ்சி வேல்விழி
இன்சொல் வாணி மணம்செய் பூந்துணர் மஞ்சரி
- வஞ்சிவந்தாள்

பெருத்த முலையொடு சிரித்த முகமும்மெய்
வருத்தும் இடையுமுள் உருக்கவே
விரித்த நவமணி பிரித்த கருத்துடன்
மெல்லவே குறி சொல்லவே - வஞ்சிவந்தாள்

கனகவளை கலகலென இருபத
கமல பரிபுரம் அதிரவே
வனிதையர்கள் செயசெயவென நிசத
மங்கை பங்கய வல்லிபோல் - வஞ்சிவந்தாள்

காமரூபி கல்யாணி கானக வித்திய
கலாப விலாசனி கோமளக்
கிறபதி யான சுந்தரி
குண தய்யாரி துரந்தரி
வஞ்சி வந்தாள் - மோகனக் குற
வஞ்சி வந்தாள். 34

வேறு தரு

மலர்க்குழல் குறவஞ்சி வந்தாள் அரையநன் னாட்டில்
குறிகாட்டிவரு தெய்வம்போல் - மலர்க்குழல்

உத்தரி யத்துகில் போர்த்து - மாக
மொன்றிரு தனத்திடை யுணர்வாகச் சேர்த்து
சித்தசன் துடர்ந்தடி பார்த்து - மனம்
தியங்கவும் மயங்கவும் சிற்றடி பேர்த்து - மலர்க்குழல்

சந்தனம் குங்குமம் பூசி - செழும்
தனத்திடங் குலுங்கப்பொற் கடகக்கை வீசி
விந்தை பலவும் உள்ள வாசி - கற்ற
வித்தைத் திறத்தில் அதிசயம் பேசி - மலர்க்குழல்

அதிமோக னாங்கியைத் தேடி - தலைசைக்கு
அதிபதி காளி மகிபனைப் பாடி
மதுமலர் மந்தாரை சூடி - அரையவள
நாடர் புகழ்மிக அதிகங்கொண் டாடி

மலர்க்குழல் குறவஞ்சி வந்தாள். 35

விருத்தம்

பூரணவான் மதிமுகத்தான் புருச மேரு
புண்ணியவான் முத்தணவேள் துணைவ னானோன்
வாரணவீ ரத்துவசன் அருள்பெற் றோங்கும்
மகராசன் காளிமகி பாலன் நாட்டில்

தோரணவீ திகள்மாட மேடை தோறும்
துலங்கியபொன் மனைதோறும் சூழல்தோறும்
காரணமா கக்குறத்தி வந்து பேசிக்
கற்ற வித்தைத் திறம்புகல்வாள் கவர்ந்து தானே. 36

வசனம்

இப்படி ரூப லாவர்ண சவுந்தரமாய் வந்த குறவஞ்சி திரைமரை விட்டு மேல்கரை அரைய நாட்டில் முதன்மையாகிய தலைசை மாநகருக்கு அதிபதியான நதிகுல தீப வேளாள குலோத்துங்க மதுர உசித வசனப் பிரசங்கன் கூறை கோத்திர சிங்கார உத்தண்ட தோர்த்தண்ட கெம்பீர சகல சாம்பிராச்சிய யோக பைங்காவி மார்பன் செங்காளி பூபன் குமாரன் காளியணேந்திரன் சமூகத்தில் வருகிற சம்பிரமம் தலைசை மாநகர மாட மாளிகை சூழ்ந்த ராச வீதிகள் தோறும் மனைகள் தோறும் தான் படித்த மணிமந்திர மூலிகை விசேஷ முன் தெய்வக் குறத்தி போலே மலைநாட்டுக் குறத்தி சொல்லி வருகுற வினோதம்.

தரு

உச்சித வித்தைகள் கேளீர் - சில
பச்சிலை மூலிகை பாரீர் - நல
கச்சணி கொங்கை மடந்தை உமையவள்
மெச்சி வரந்தர வேணது பெற்றேன் - உச்சித

ஆகாச மாறாம லாக்கும் - காத்தைப்
போகா திருக்கவும் போக்கும் - வெகு
தாக மிலாது சலாதி குடிக்கும்
யோக மிலாதுல காள முடிக்கும் - உச்சித

செல்என நீரெதிர் செல்லும் - கவி
சொல்என ஆமையும் சொல்லும் - தினம்
அல்லும் பகலாகக் கல்லும் கரைவாக
வல்லமை கொண்டேது வெல்லவு முண்டு - உச்சித

கங்கா குலகுண சீலன் - தலைசைத்
துங்கன் காளிமகி பாலன் - செய
சிங்கார லோலன் தரும் காதல் கொண்டவ
ணங்கோர் வரும்அந்த விதங்கூற வந்தேன் - உச்சித. 37

கலிப்பா

அதிசயவித்தை கள்பலவும் ஆராய்ந்துசொல்லும் குறத்திக்கு
எதிர்பெறவந் தொருபாங்கி இன்பமுடன் அழைத்துவரச்
சதிர்முறைமை பிறழாமல் தருமதிக்கும் குறவஞ்சி
மதிமுகமோ கினிவாழும் மனைவளப்பம் புகல்வாளே. 38

குறத்தி வாசல்வளம் கூறுதல்

மணிகொழிக்கும் வாசலிது அம்மே - மனுநீதி வாசலிது
அணிபரவும் தலைசைநகர்க் கம்மே

அதிபதிதன் வாசலிது - நல்ல
பைந்தொடி மாதர்கள் கூடி
ஆடல் பாடல் மிகும் வாசலிது - எங்கள்
கந்தர் சிவகிரி வேலர் திருக்
கருணையுள்ள வாசலிது - செய
காராள குலதிலகன் அம்மே
கற்றவர்க்கு அனுகூலன் அம்மே
பாராளும் மன்னர் மெச்சும் - தினம்
படசமுள்ளோன் வாசலிது அம்மே
வல்லமைசேர் வாசலிது - புகழ்
மகிபாலன் வாசலிது - நல்ல
சொல்லரும் நித்யசுப சோபனம்சேர் வாசலிது
தனமிகுந்த வாசலிது அம்மே
தன்மைமிகும் காளிமன்னன்
நாலுதிக்கும் கீர்த்திபெற அம்மே
நாட்டிமைசெய் வாசலிதே! 39

கலிப்பா

நிறைமிகுந்த வாசல்வளம் நிலையெல்லாம் மகிழ்ந்துரைக்கும்
குறமகளே நெறிமையுடன் குடியிருப்பது எந்தமலை
பொறைமிகுந்த நாடேது புதுமைக ளேதுனது
துறையிருந்த வாழ்க்கையென்ன தொகைவிரித்து மொழிவாயே.
40

தரு

மந்த ராசலம் பொன்னின் மேருவும்
கந்த மாதன வெற்பும்
வடவேங் கடமலையும் குடக்கினில்
வாழ்வெள்ளிப் பொருப்பும்
சந்திரா சலமும் கயிலாசமும்
தன்னிலே குடி யிருப்போம்
தருநீடிய மலையாசலம்
அதிலே தமிழ் படிப்போம்
விண்ணோர் தொழும் அண்ணாமலை
எண்ணாதவர் உண்டோ
வேதகோச மிலாத வேதியர்
வீதிதான் சிலவும் உண்டோ
மண்ணாடதில் எண்ணொனாமலை
வாச மாகவந் தடுத்தோம்
மாது வள்ளிதன் பாகற்கே - பின்
சீதனம் பெறக் கொடுத்தோம். 41

நாடு

தரு

பூணாரம் போல்திகழ் சோணாடெங்கள் நாடு
பூங்காவிரி பாங்காய்வந்து நீங்காதபொன் னாடு
மாணார்தமிழ் வளர்பாண்டியன் வளநாடெங்கள் நாடு
வஞ்சியாதிபன் சேரன்மால்வளர் மலைநாடெங்கள் நாடு

காஞ்சிமாநதி யோடுபொய்கைகள் கதித்தோங்கிய நாடு
கனஞ்சேர்ந்துயர் மகுடாசலத் தலம்சேர்ந்தபொன் னாடு
வாஞ்சைமேவிய ஊஞ்சலூருடன் மனுமேவிய நாடு
வண்மைசேர்வல்லி புரத்தோடுஎழில் உண்ணக்கூறிய நாடு

அருள்சேர்வடி வுள்ளமங்கலம் அய்யமாநக ருடனே
அன்புலாவிய காவிரிப்பதி இன்பம்நீடிய நாடு
மருவார்எழு நூற்றுமங்கலம் வாளரசநல் லூரு
வையம்புகழ்ந் தோங்கவேயருள் செய்கைநீடிய நாடு

சீரார்தமிழ் தலைசைப்பதி தெரியும்திரு நாடு
சிறப்பாகிய வெங்கைமாநகர் சேருந்திரு நாடு
பேராகிய கொந்தளத்தொடு பெலம்சேர்ந்திடும் நாடு
பெருவாழ்வுள்ள கொல்லங்கோவிலைப் பெற்றுவெற்றி
கொள் நாடு

அஞ்சூரொடு மொஞ்சனூர்செயல் ஆனநல்வள நாடு
ஆனதுர்க்கை யம்பதிகார்வழி ஆண்மைசேர்ந்திடு நாடு
மஞ்சுலாவிய சோலைசூழ்வயல் மாறாதபொன் னாடு
மனுநீதியின் முறைமேவிய அரையநாடெங்கள் நாடு

சித்தியோகிகள் ஆடராட்சதர் திரையும்திறை உண்டு
திறளாகிய பட்சிசாதிகள் லட்சம்கோடிகள் உண்டு
மெத்தவேபல மிருகசோடிகள் ஒத்துநாடொறும் திரியும்
வேடரும்தவ வேடராகிவில் வேடருங்கணை பிரியும்

உறவானவர் பகையாகவும் ஒருமூலிகை காட்டும்
ஒருமூலிகை பகையானவர் உறவாகவும் காட்டும்
மறைவாகிய ரசவாதிகள் வகைக்குண்டொரு பூடு
வையத்தை வசீகரித்து மயக்கும்சில கோடு

பதினாலுலகம் காணவோர் பச்சைத்தளிர் உண்டு
பசிதீரவும் உசிதங்கள்செய் பிசினும்சில உண்டு
அதிராதவர் படைவெல்லவும் அதற்குண்டொரு தந்திரம்
ஆசைகொண்டு மின்னார் தொடர்ந்திட அதற்குண்டொரு
மந்திரம்

தள்ளொணாஅதி சயமூலிகை உள்ளதுக்கள வில்லை
தானாத்தனித் தனியேசொல்லப் போகாதது தொல்லை
வள்ளிசிவ கிரிவேலரை உளம்அன்புறப் பணிவோம்
வகையாகவும் அக்குமாலிகை தொகையாகவும் அணிவோம்
திக்கெலாம்புகழ் முத்தபூபதிக்கு உற்றமெய்த்துணை ஆனோன்
செங்காளிசொல் காளிபூபனைத் தினந்தேடுமோ கனமே
மெய்க்கவேயுனை யொத்தபெண்களை மேவுவோம்அடி மானே
விருப்பமாகவும் உரைப்போம்குறி மதிப்பாகவும் தானே. 42

கலிப்பா

வச்சிரபூ சணம்தரித்த மடமானே குறமகளே
நிச்சயமாய்ச் சஞ்சரித்து நீயறிந்த தேசம்என்ன
உச்சிதமாய்க் குறியுரைத்து உண்மையறிந் தவர்உமக்கு
மெச்சியநல் வரிசையென்ன விதவிதமாய் மொழிவாயே. 43

தரு

சஞ்சரித்தேன் மயிலே - வெகுதேசம்
சஞ்சரித்தேன் மயிலே

செஞ்சொல் குலாவிய தென்தலைசைக் குணதீரன்
செங்காளி குமாரன் தமிழ்நாவலர்
அஞ்சலென் றேயருள் காளி மகீபன்
உல்லாச நன்னேச விலாசன் கொண்டாடவே - சஞ்சரித்தேன்

கல்யாண தேசம்கர் னாடம் தென்னாடம்
கலிங்கம் தெலுங்கம் கவுடம ராட்டமும்
கொல்லாபு ரம்கொச்சி கோளிக் கூடு
குருதங்கும் சரம்கச்சி கொங்கணம் எங்கெங்கும்
- சஞ்சரித்தேன்

வல்லமை யாகிய மக்கம் துலுக்கத்தர்
வாதிட்டுக் கேட்கவும் சூதொட்டிச் சொன்னேன்

பல்லக்குத் தந்தனர் டில்லிக்கு வந்தேன்
பட்சங்கொண் டேயொரு லட்சம்பொன் தந்தார்
- சஞ்சரித்தேன்

சந்திரா தித்தற் கொருவழி சொன்னேன்
நந்தாத தெய்வமும் சஞ்சரிக் கும்படி
தாமக் குழல்வள்ளி மாமிக் கொருகுறி
சட்டமொக் கச்சொன்னேன் கட்டுவர்க் கம்தந்தாள்
- சஞ்சரித்தேன்

முந்திக் குபேரனைச் சந்தித்து நின்றேன்
முன்னாள் மொழிந்தனன் என்னாளும் நிற்கவும்
அந்தப் படிக்கவன் ஆதிக்கம் ஆனான்
அளகா புரிக்குப் பலபேர் துதிக்கவே - சஞ்சரித்தேன்

எந்தெந்தத் தேசமும் சஞ்சரித் தேன்அம்மே
இப்பாரி லேயுனக் கொப்பாரைக் காணேன்
திக்கெங்கும் கொண்டாடி மெய்க்குறி சொல்லி
ஐந்தருப் போலே யுகந்தரு வான்தென்னங்
கசரூபன் செங்காளி மகீபன்
சொல்லால் அழகன்புகழ்க் காளிமகீபன்
உதாரன் தயாளன்என் னாளுங்கொண் டாடவே.
- சஞ்சரித்தேன் 44

கலிப்பா

தேசமெல்லாம் தனித்தனியே சென்றுவெகு குறியுரைத்த
ராசவெகு மானவகை ரமித்திடவே பெற்றனள்காண்
போசன்என வருகாளி பூபதியைக் கண்டுமயல்
ஆசைமிக வாகினள்காண் அணைவதுண்டோ குறமகளே. 45

தரு

அந்திவேளையில் மந்தமாருதம் வீசஆனை மீதினில்
மானபரவச மான ராசதம் மிஞ்சவே

வந்தகாளி மகீபசல் லாபன் மேல்

மைய லாய்மனம் அணையவே

மதனெய்ய வோர்தனி யாகினேன்

நாடியே அவர் கூடிமுத் தாடியே

நாகரீக வைபோக மாயனு ராகபோகம்உண் டாகவே

கூடுமோ வந்து கூடாதோ குறிசொல்லாய்

கொங்கை மீதணி குங்குமம் ஆதி

புளுங்கவே உளம் தியங்குதே

என்னமோகம் இதென்ன விசாரங்காண்

ஏற்கையோ இது பார்க்கவே

மடவார்க் கெலாம் நகை ஆகுதே

இன்னவா றென்று சொன்னேன் குறமகளே

ஏசிநின்றவர் கூசிநின்றிட வாசகம்சில

பேசலாம் வருவானோ முத்தம் தருவேனோ. 46

கலிப்பா

நித்திலமும் நவமணியும் நினைத்தபொரு ளும்தருவேன்
உத்தமவேள் காளிமன்னன் உபயகுல பரிபாலன்
முத்தமிட்டு நெருக்கியொரு முகத்தில்முகம் வைத்தணைத்து
சித்தமுற மருவுவனோ தெரிந்துரையாய் குறமகளே. 47

சிந்து

தோகை யேநீ கேட்ட குறிவிதம்

சொல்கி றேன்இனிக் கேளடி அம்மே

வாகு சேர்தலை மூழ்நீ என்முன்னே

வந்து நில்லடி சொந்தம தாகவே

பாக மாஞ்சதி ரங்கொண்டு மெழுகிநீ

பணமும் பாக்கிலை கணபதி முன்னேவை

யாக மேதெரிந் திடவுமே யென்குறி

கடவு சாம்பிராணித் திடங்கொண் டோடிவா. 48

மங்கை யேரதி தங்கையே நான்சொல்ல
வருந்திக் கேளடி இருந்துக்கோ என்முன்னே
உங்கள் வீட்டுக் கெவுளி பலபலவென்று
செப்புது உங்கள் குலதெய்வத்து இசைவுண்டு
கொங்கு லாவிய மகுடலிங் கேசற்கு
கும்பிட்டுக் கொண்டு செம்பொற் கிரீடம்வை
எங்கள் நாயகி வடிவுள்ள மங்கைக்கு
இடைக்கொட்டி யாணமும் சடைக்குப்பி நேர்ந்துக்கோ. 49

பலனு மேதரும் மலையம்மன் இருபதம்
பணிந்து கும்பிட்டு அணிந்திடச் சிலம்புவை
தலைசை மாநகர் வளரும்பொன் காளிக்கு
தங்கத் தண்டையும் திங்கள்சுட்டி நேர்ந்துக்கோ
நிலைமை சேர்எங்கள் சிவகிரி வேலர்க்கு
நேர்ந்து கும்பிட்டுச் சாந்துகஸ் தூரிவை
கலச மாமுலை வளரும் விசா லாட்சிக்
கன்னிக்கு அஞ்சுபொன் வர்ணச்சித் தாடைவை. 50

சின்ன மூலியோர் கொட்டாவி வருகுது
சேலைக் காரிக்குச் சாலக்கும் பிட்டுக்கோ
தென்னு லாவிய அத்தனூரு அம்மைக்கு
சேலையும் முத்து மாலையும் நேர்ந்துக்கோ
அன்ன மேஎங்கள் மதுரையின் வீரர்க்கு
அளகு சாராயம் விரைவுடன் கொண்டுவை
பொன்னு லாவிய புத்தூரு அம்மைக்கு
பொங்கல் ஆட்டுக் கிடாயும்வைத் தேற்றிக்கோ. 51

ஏதடி இன்னம் வடபத்ர காளிக்கு
இசைந்து தப்பின பிசகொன்று காணுது
தாது லாவிய பூசை மணியொன்று
தளிகைத் தட்டமும் நேர்ந்துக்கோ கும்பிட்டு

வாது சேர்எங்கள் வண்ணாரக் கருப்புக்கு
வைத்துக் கும்பிட்டொரு கத்திசா ராயம்வை
மூதம தாகவே வளரும்முத் தாலைக்கு
முன்னே சொன்னது மின்னேகண் ணடக்கம் வை. 52

நன்ன யம்பெறு பொன்மாரி யம்மைக்கு
நாட்டி வையடி நன்றாய் விளக்கைந்து
சொன்ன காரியம் சங்கிலிக் கருப்புக்கு
சூட்சி யாய்மலர் சாற்றிவைத் தேற்றிக்கோ
வன்ன மாத்திரைக் கோலுக் கொருபணம்
வைத்துக் கும்பிடு மெத்தவும் தேவியை
தன்மை பெருகும் பட்டத் தலைச்சிக்குத்
தளுக்கு மூக்குத்தி குழைக்குப்பொன் ஓலைவை. 53

நற்பு லாவிய என்குறக் கட்டைக்கு
நாலு காசுவை சூடம்சாம் பிராணிவை
அற்பு தம்பெறு என்குறக் குட்டிக்கு
ஆவல் தீரவே சேறெண்ணை கொண்டுவா
தப்பி ராதடி நான்சொன்ன குறிவிதம்
தைய லேநிசம் மெய்யென எண்ணிக்கோ
செப்பம் மீறிய மஞ்சளும் பாக்கிலை
திட்டி சுற்றடி அட்டிசொல் லாமலே. 54

கேட்ட காரியம் சொல்கிறேன் கேளடி
கிரண பூரண தருணசெங் காளிமால்
தாட்டி கம்பெறு காளி மகீபதி
தலைசை மாநகர் பவனிவந் திடும்வேளை
கோட்டு மாமுலை மாதர் அநேகங்கள்
கூம்பு கூடியே சம்பிரமங் காணுது
தேட்ட மாயிந்த வேடிக்கை பார்த்திட
தோகை நீவந்து பூணிக்கை தோணுது. 55

வாச மாகிய காளி மகீபதி

மையல் கொண்டது தையலே தோணுது

ஆசை நாயகன் உனைவந்து சேர்ந்தால்

அறிந்து சொல்கிறேன் வருந்தியே கேளடி

நேச மாகிய பாங்கியர் பூமாலை

நிறைவ தாகவே வருகுது பாரடி

தேசு லாவிய மாதர சேகொண்டை

திருத்திக் கோபத றாதே நீயுமே. 56

கலிப்பா

கணபதியைக் கைதொழுதேன் கந்தரிணைத் தாள்தொழுதேன்
குணம்இனிய வள்ளியம்மை குறிப்பறிந்து தோத்தரித்தேன்
மணமிலகும் புகழ்க்காளி மன்னவன்வந் திணையஇனிப்
புணரும்வகை குறிதெரிந்து போந்தெமக்கு மொழிவாயே. 57

தரு

குறிபார்க்க வாராய் - அம்மே
குறிபார்க்க வாராய்
குணமிகு கிளியே - குயிலே
குறிபார்க்க வாராய்.

வீரலட்சுமி கரத்தில் விளங்கும்இந்த ரேகை
மேனகையின் மீனம்என மேவுமிந்த ரேகை
வாரிசைப்பெண் போலவும் மயக்குதிந்த ரேகை
மதனரதி வடிவுபோல் வாய்க்குதிந்த ரேகை

ஆர்க்குமில்லை காணும்இந்த பாக்கியமுள்ள ரேகை
அலங்காரம் காண்முகத்தில் இலங்குமிந்த ரேகை
வார்கலச முலைத்திரமும் பார்க்கில்இது தாமே
மகிபாலன் ஒருவனை மயக்குவள்காண் அம்மே

இந்திராணி நீயென்பது இந்திராணி தானே
இடைத்துடையில் இருக்கும்மறு எவர்க்குளது தாயே

சந்திரோ தயம்போலே தயங்குமுகத் தழகும்
    தமனியபொற் கலசமெனும் தனத்தழகி னாலும்
சுருண்டகுழல் மருண்டவிழி துவண்டஇடை யாலும்
    துலக்கமொடு முகத்தினில்வேர் இருக்கும்நகை யாலும்
தண்ணார்ந்த கடம்பன்முரு கேசர்சிவ கிரியில்
    சன்னதியில் தொனிக்கின்ற சங்குத்தொனி யாலும்
அரையவள நாடனுயர் காளிமகி பாலன்
    அனுதினமும் உனைமருவி அணைவனடி அம்மே
வரிசையுடன் மகிழ்வெய்தி மகாலட்சுமி போலே
    மைந்தரொடு சந்ததமும் வாழுவைநீ யம்மே. 58

கலிப்பா

பருவமுகில் முத்தணபூ பாலனுக்கு முன்னவனாம்
குருசில்உயர் காளிமன்னன் குலாவியுன்னை மருவுவன்காண்
பரிதிதிசை மாறினும்நின் பகற்குறிபொய் யாதலவோ
தருவரிசை வாங்கெனவும் சபைமதிக்க வந்தனளே. 59

தரு

வேண வரிசைகள் கொடுத்தாள் - வேடிக்கையாக
வேண வரிசைகள் கொடுத்தாள்
சேணுயர் தலைசைநகர் காணி பெறுங்காளி
மாலிந்தி ராணியெனும் மோகனமின்
- வேண வரிசைகள் கொடுத்தாள்

தங்கவளை முன்கையில் கட்டும் பவளஞ்சரி
கங்கண நுதலில் பொட்டும் புளகபாரச்
செங்கலச முலைக்கச்சும் கொங்கலர் குழலில்குச்சும்
மங்கையர் மனம்பிரமிச்சு எங்கணும் புகழமெச்சும்
- வேண வரிசைகள் கொடுத்தாள்

பாதசரமும் பொன்னோலையும் மணிமேகலை
    சந்திரச் சரிகைச் சேலையும்

முத்தார நுதல்மீதினில் பிரபைச் சுட்டியும்
 விரலில் மெட்டியும்
தாதுயர்மணிப் பெட்டியும் மாதுபொன்கிளிக் கட்டியும்
 - வேண வரிசைகள் கொடுத்தாள்

வல்லிகுற வஞ்சி வேணகுறிசொல்லியும் நித்திய
கல்லியாண சுபமங்கள வல்லவன் காளிமாமோக
மெல்லியெனும் வைபோக நல்லதென வும்சினேக
வில்லினுதா ளாளனேக வேணவரிசைகள் கொடுத்தாள். 60

விருத்தம்

நேசவே ளாளர் கொற்றம் நிலைபெறும் குறிகள் சொல்லி
வாசல்கள் தோறும் நன்றாய் வரும்சிங்கி தன்னைக் காணான்
ஆசைவங் கணமா தென்பன் அவளையும் பிரிய மாட்டான்
தேசதே சங்கள் தேடிச் சிங்கனும் தோன்றி னானே. 61

தரு

நாடும் திசையும் நயந்து மகிழ்ந்தருள்
 நரபதி காளி மகீபன்நன் னாட்டில்
பேடும் காவலும் என்னக் குறமகள்
 பிணக்கொடு குழுவனும் தோன்றினான்

தட்டுத் தடுமாறித் திரியும் நடையும்
 சஞ்சல மான மனதும் தலைச்சாய்ப்பும்
மட்டுக் கொள்ளா லாகிரி யுடனும்
 வந்தான் சிங்கனும் தோன்றி னானே.

கருப்புக் கச்சையை இறுக்கிச் சுழல்க்கொடு
 கையினில் சில்லாக் கோலும் கண்ணி கொண்டு
மறக்கத் தறியாச் சிங்கியைத் தேடி
 மலையாங் குறவனும் தோன்றி னானே.

விக்கிரமா தித்தன் எனும் தலைசைப்பதி
மேவிய காளி மகீபன் குளத்தினில்
பக்குவ மாக்குறப் பயலவன் நூவனும்
பக்கிப் பிடிக்கவும் வந்தானே. 62

வேறு தரு

மேயினுமையே தனித்தனி மேயினுமையே
மேயினுமையே தனிப்பக்கிகள் வெண் காடானும்
சிறுசெங் காடானும்
கருவாயசமும் வல்லானும் உள்ளானும் மல்லாடித்
தள்ளாடி மண்குன்றி லேநின்று
- மேயினுமையே

முத்தண பூபதி மெய்த்துணை யானோன்
மோகன ரூபன்செங் காளிமுன் னுற்றவன்
சித்தச வேள்சின்ன பூபன் துணையானோன்
தீரன் மகாராசன் காளிபூ பன்நாட்டில்
ஒத்த செஞ்சாலி வயல்தனில் நின்று
குதித்துக் கயல்குலம் அத்தனை யானதில்
கொத்தி யெடுத்து மிடற்றில் இருத்தி
நெகிழ்ச்சி வருத்தி லுகத்தொரு பத்தியில்
- மேயினுமையே

செஞ்சொல் தமிழ்க்கவி வாணர் மகிழ்ந்தருள்
மயில மகீபன் சகோதரன்
கஞ்சத்தில் வாழ்திரு மார்பன்செங் காளிசொல்
காளி மகீபன் பொன்னேரிக் கரையினில்
மஞ்சள் குருவியும் மாடப் புறாவும்
மயிலும் குயிலும் மரங்கொத்தி யும்சுற்றி

வஞ்சிக் கொம்புக் கஞ்சி மஞ்சைப் புஞ்சைக்கொட
வஞ்சக் கஞ்சரிட மிஞ்சிக் குஞ்சைத் தேடி
மேயினுமையே பறவைகள் மேயினுமையே. 63

வேறு தரு

பாற்குரறையே பறவைகள் பாற்குரறையே
கார்க்குநிகர் கொடையாளன் செங்கா ளிசொற்
காளிமகிபன் சமரில்ஒன் னார்கள் மின்போற்
கண்டலைந்து கலந்தோடும் மார்க்கம் போல
புள்ளினங்கள் அளமாய்மெள்ளச் சுற்றி யெட்டிப் - பாற்குரறையே
மட்டுலவும் குவளைத்தார் இனமார்பகன்
வாதிட்டபேர் தெருளும் வீரபராக்கிரமன்
அட்டதிக் கும்புகழ் காளிமகீபன்
அன்புற்றதோர் நொய்யலாற்றுக் குள்ளேசில
சிட்டுக் குருவியும் நெட்டைக் குருகுமெய்க்
குட்டைக் குரண்டமும் கூட்டித் திரண்டொரு
நெட்டுக் கண்ணிக்குள்ளே கட்டுப்பட் டுக்கொண்டு
தட்டுப்பட் டாடியே தெட்டுப் பட்டுதையோ.
- பாற்குரறையே 64

கெம்பாரடையே பொறுபொறு கெம்பாரடையே
கெம்பார டையய்யே தென்தலை சைப்பெருங்
கீர்த்தி மிகும்கூறை கோத்திரன் காளியண்ணன்
வம்பவிழ் பொன்னி நதிக்கரை மீதினில்
வருகுங் குருவி வெருவித் திரியுது - கெம்பாரடையே
தக்க குணநல சோமன்பைங் காவியர்
தாமன்கங் காகுல நேமன் காளிபூபன்
மிக்க குளக்கரைக் கொக்கும்உள் ளானுக்கும்
வேணதுக் கும்கண்ணி தோணக்குத்தி - கெம்பாரடையே

சுற்றிப் பக்கிக்குலத் தைப்பதைக் கப்பிடித்துப்
    பதைக்கப் பதைக்கக் குறக்கூடைக் குள்ளிட்டுத்
திக்குப் பொருக்களுக் கென்னக் குறப்பயல்
    தேடிக்கொண் டேசிங்கி வேடிக்கை யாக - வருகுரறையே

65

விருத்தம்

வஞ்சனை யனேகம் செய்து வகைவகை யாகப் பக்கி
அஞ்சவே பிடித்து வந்தேன் ஆக்கிவைத் திடுவாள் காணேன்
கொஞ்சியே குறத்தி நீலி கூட்டமிட் டேதோ போனாள்
நெஞ்சமே தஞ்சம் நீயே நிலவரம் தெரிந்தி லேனே. 66

தரு

எங்கே போனாளய்யே - சிங்காரச் சிங்கி
எங்கே போனாளய்யே
வங்கண மோகத்தாலே மயங்கித் தவிக்கிறேனே
- எங்கே போனாளய்யே...

முன்னைச் சண்டையி னாலோ
    மோக விதங்கள் தானோ
என்னைத் தனியே வைத்தும்
    ஈசர் பொறி நினைத்து - எங்கே போனாளய்யே

போனாள் தனியே யேதோ
    பூறாயமும் என்மீதோ
ஆனால் என்ன தொல்லை
    என்னாசை தணியுதில்லை - எங்கே போனாளய்யே

கள்ளு மயக்கம் கொண்டு கலங்கித் திரிதல் கண்டு
உள்ளம் கருத்து நின்றும் ஊரோ மலாகச் சென்று
- எங்கே போனாளய்யே

சொன்ன குறிதப் பாதும் சொல்லுவள் தாளெப் போதும்
கன்னியர்க் காசை பூட்டிக் காளி மகீபன் நாட்டில்
எங்கே போனாளய்யே - சிங்காரச் சிங்கி
எங்கே போனாளய்யே 67

விருத்தம்

தனிவழி போனாள் ஆசை தணிக்கிலாள் தன்னைச் சேராள்
எனமனது இரங்கி வாடி இருக்கின்றாள் இனியார் அந்த
வனிதையர் வனிதைக் கேற்ற வகையடை யாளம் என்ன
கனிவொடு வசனி யென்னக் கண்டகா ரியம்சொல் வானே. 68

தரு

எத்தனை என்று சொல்வேன் - சிங்கிகுணம்
எத்தனை என்று சொல்வேன்
எத்தனை யானாலும் நித்திரைக் குள்ளே
அணைத்துத் துணைக்கை நெகிழ்த்தவு மொட்டாள்
- எத்தனை என்று சொல்வேன்

குத்து முலைத்தடம் வைத்த நகக்குறி கண்டேன் - தட்டி
மொத்தி யதட்டுவள் கைத்தல மிட்டெதிர் கொண்டே
நயமுற் றலுக்கும் சற்றே பிலுக்கு
முத்தமலுக்கும் பெற்ற பிலுக்கும்
- எத்தனை யென்று சொல்வேன்

தங்கச் சிலம்பிட்டுப் பங்கம் படுத்துவள் ஐயே - மெள்ளத்
தள்ளிவிட் டுப்பனங் கள்ளுக் குடிப்பாள்காண் ஐயே
இருகொங்கை நெருக்கும் சிங்கி செருக்கும்
இங்கெவ ருக்கும் அங்கம் உருக்கும்
- எத்தனை என்று சொல்வேன்

உரியபுகழ் மேலரைய வளநாட்டை நினைந்தாள் - யார்க்கும்
ஒக்கும் குறிசொல்லி மெய்க்கும்பொன் னாடைகள்
புனைந்தாள் எனைப் பிரியவும் கொடுத்தாள்
வரவு தடுத்தாள் விரக மெடுத்தாள் மருவியெடுத்தாள்
எத்தனை என்று சொல்வேன் - சிங்கிகுளம்
எத்தனை என்று சொல்வேன். 69

தாழிசை

உரகந்துயில் புரிமால்திரு மருகன்சிவ கிரிமேல்
உயரும்செயல் முருகன்கழல் பணியும்சவு ரியவான்
தருமங்கர தலநீடிய குணசந்திர வதனன்
தமிழ்தங்கிய தலைசைக்கெழில் தருகூறை குலேசன்
மருவும்குவ ளையின்மார்பகன் வளர்காளி மகீபன்
வரையின்குடி பெருசங்கிதன் மயல்கொண்டெதிர் காணா
விரகம்சகி யாதேகுழு வனும்நொந் தயர்போதில்
மீறுங்குற மாதுஞ்செய லாய்வந்தனள் தானே. 70

தரு

ஃதோ வந்தாளே - பாரே
ஃதோ வந்தாளே

பூதல மேழ்புகழ் காளி வசீகர
பூபதி மெச்சும் பிரதாப மிகுத்தே - ஃதோ வந்தாளே
நாராவும் கொக்கும் நலமாய்ப் பொரித்தொரு
நாலைந்து கூட்டியென் பாலிங்கே வைக்கவும்
சாராயத் தோடிரு கூறாய்ப் பிரித்து
தக்கவே தின்றுநான் எக்களிப் பிக்கவும் - ஃதோ வந்தாளே
ஒட்டார மாக எனைப்பிரிந் தய்யய்யே
தட்டாணிச் சிங்கி கரந்தனள் வந்தாள்

தட்டாரப் பூச்சிபோல் அட்டால தேசமும்
தட்டாமல் சுற்றுவேன் மட்டுப்பட் டேநான்

ஈதோ வந்தாளே - பாரே
ஈதோ வந்தாளே. 71

விருத்தம்

கொங்குயர் தலைசைக் காளி கொற்றவன் நாட்டி லென்று
வங்கணச் சிங்கி தன்முன் வரும்சிங்கன் கண்டு மாதர்
செங்கையில் குறிகள் பார்த்துத் தேசங்கள் திரிந்தா லென்ன
சங்கதி நலதோ வென்று தடுத்துரை புகலு வானே. 72

தரு

உல்லாச மாகவே சொல்லாமல் நெடுந்தூரம்
நில்லாமல் நீசென்ற நினைவேது சிங்கி
நல்லார் மனமயக்கும் காளிபூ பணேந்திர
நரபதி கொலுக்காண நடந்தேன்காண் சிங்கா

கரிய குழலைக்கோதிக் களிப்புடன் சிகையின்மேல்
குருகின் இறகைச்சூடும் குணமென்ன சிங்கி
வரநதி சூடிய மகுடாச லேஸ்வரர்
மகிழ்ந்து தந்தமுல்லை மாலைகாண் சிங்கா

துத்திப் பூவெடுத்துத் துலங்கிய குழலின்மேல்
வைத்துவைத் தால்நம்மை மதிப்பாரோ சிங்கி
முத்தணன் தலைசைவாழ் சின்னய்யன் உகந்தருள்
பெற்றசந் திரசூரியப் பிரபைகாண் சிங்கா

பீக்கன் பூவெடுத்துப் பெருங்காதின் மேல்வைத்தால்
பார்க்குள்நமக் கெந்நாளும் பழிப்பாமே சிங்கி
கார்க்கோலம் போலொரு செங்காளி மயிலேந்திரன்
சீர்க்கொள மிகுபுகடிச் சேரவைப்பார் சிங்கா

வட்டமிட்ட துத்திமலரில் சூத மலர்கட்டி
நுதலில் இட்ட கருத்து என்னடி சிங்கி
துட்டர்கண் டகன்சுதன் செங்காளி சின்னையன்
சுட்டி தரத்தரித்தேன் சூதென்ன சிங்கா

குடமொத்த தனத்தின்மேல் கோரவைச் சீந்திக்கனி
துடர்செய்து நீபூண்டால் துலங்குமோ சிங்கி
நடன பரிநகுலன் குமாரச்சின் னையன்காளி
நல்கிய பவளத் தாவடம்காண் சிங்கா

சங்கங் கனியெடுத்துச் சரமாக வேகோர்த்து
கொங்கை மீதணிந்த குணமென்ன சிங்கி
பொங்கமாய் வெங்கம்பூர் புகழ்மன்னர் குறிகேட்டு
மங்களா கரமுத்து மாலைகாண் சிங்கா

கஞ்ச மலர்ப்பதத்தில் கலுக்குப் பிலுக்கெனவே
கொஞ்சிக் கொஞ்சிநடை கொண்டதேன் சிங்கி
அஞ்சூரு கொந்தளம் அரையநாட்ட டார்அருள்
மிஞ்சுதண் டைச்சதங்கை விருதலவோ சிங்கா

மத்தடங் கண்ணியர் மகிழ்ந்திட நெகிழ்ந்திட
பித்தளை வளையிட்ட பெருக்கமேன் சிங்கி
உத்தமர் மொஞ்சனூர் கொல்லங்கோவி லார்தந்த
அஸ்த்தக் கடையமிதோ அணிந்தேன்காண் சிங்கா

பெருமையென் றேமின்னைப் பிடித்துடை உடுத்தினால்
தெருவில் அரிவையர்கள் சிரிப்பாரே சிங்கி
வரிசையாய்க் கார்வளி துர்க்கையம் பதிமன்னர்
சரிகைச் சேலைதந்தார் தரித்தேன்காண் சிங்கா

சீரான தலைசையில் செயகூறை குலமேவும்
பாராளர் மேல்தமிழ் படிப்போம்வா சிங்கா

தாராள மாய்க்காளி பூபதி பொற்பணி
ஏராள மாய்த்தருவன் எய்துவம் சிங்கா

சொன்ன மொழிக்கெதிராய்த் தொடுத்துக் கொடுத்துச்சொன்னால்
உன்னை வெல்லக்கூடா துறவுபார் சிங்கி
பொன்னுல குள்ளவர் பொருந்தப் போகமெய்தி
மன்னிக் கூடிநாளும் வாழ்வோம்வா சிங்கா

முறைமைமுத் தமிழ்வாழி மோகுளி குலம்வாழி
அறிவுசேர் அரைய நாட்டார் களும்வாழி
வேளாளர் குலம்வாழி மேதினியோர் வாழி
நீடிய தலைசையில் நிருபரும் வாழி
காளி பூபன்வாழி கனகூறை குலம்வாழி
நாள்தோறும் சிரஞ்சீவி நரபதி வாழி 73

தலைசையம் பதிவாழி பொன்காளியம்மன் பாதமே கதி.

2. கூறைகுலத் தண்டிகைக் காளியண்ணன் மீது தனிப் பாடல்கள்

வெண்பா

செங்காளி காளியண்ணா சீர்அரைய நாடதிபா
துங்காதென் கூறைகுலச் சோமனே - எங்கெங்கும்
உன்னையே பாடுவேன் உன்புகழை யேதுதிப்பேன்
பின்னைவே றில்லைப் பிழைப்பு.

விருத்தம்

செந்தமிழ் வளம்பெற்ற தலைசைமின் னாம்பள்ளி
சேமூரு மாதேவியும்
செயதிடுமல் நசையனூர் வெள்ளியணை மேச்சேரி
செகதா புரம்கொத்தனூர்

அந்தமிகு பாப்பினி பிடாரியூர் பழனியும்
அருள்திண்ட மங்கைநவனி
அரசிலா மணிபெரிய புலிநகர் கிழாம்பாடி
அழகுள கலங்காணியும்

சந்தமிகு வடுகநகர் இவையெலாம் மேன்மேல்
தழைக்கவே காணிபெற்றாய்
சதுரங்க சேனைசெறி அரையவள நாடனே
சம்ப்ரமிகு கூறைகுலனே

கந்தமிகு நாகீசர் அழகுதிரு வனிதையைக்
கரிவரதர் பொன்காளியைக்
கனவில்மற வாமலுயர் காளியரு ளால்வந்த
காளியண மகராசனே!

3. காளியண்ண கவுண்டர் செய்த புலவர் நியமனம்

முன்பு தென்கரை அரையநாடு சோழியப் புலவருக்கும், வட கரை அரையநாடு சேரகுலப் புலவருக்கும் காணிப் புலமை உரிமையாக இருந்தது. நாட்டிமைக் காளியண்ண கவுண்டர் சோழியப் புலவரை நீக்கி சேரகுலப் புலவருக்கு அரையநாடு முழுவதும் உரிமை தந்ததைக் குறிக்கும் பாடல்.

மணிகொண்ட செயவிகாரி வருஷமது தன்னில்தை
　　மாதம் உவந்துமிக்க
வளர்சதுர்த் தசியில் பூசமுட னேபுந்தி
　　வாரமும் பெற்றநாளில்

திணிகொண்ட தென்னரைய நாடது விளங்கவும்
　　செய்யென மூன்றுநாடு
திறமைமிகு கவிஞர்பெரி யோர்கள்மனம் மெச்சவும்
　　சிதம்பரப் புலவருக்கு

தணிகொண்ட புவியரசர் கொண்டாடு கொடுமுடித்
　　தலமதில்ராச படிநிலையும்
தந்துமான்ய வள்ளம் முப்பத்தி ரண்டுபூமி
　　சிலைசாச னம்செய்துமே

பணிகொண்ட பொன்காளி செயல்கொண்ட காளியண
　　பாக்யதுரை நாடனைவரும்
பரிவுடன் நமதுடைய புலவரென நிலைசெய்து
　　பட்சம்வைத் தனர்வாழியே!

தாமரைப் பாளையத்தின் மேல்புறம் புலவன் காட்டிலும், வெங்கம்பூர் அக்கரைப்பட்டியான் கோயில் பக்கத்திலும், கொடுமுடி இரயில்நிலைய மேல்புறம் உள்ள வயலிலும் இதைக் குறிக்கும் கல்வெட்டுகள் உள்ளன.

4. கூறை குலப் பழனிக்கவுண்டர் மீது கொல்லபட்டப் புலவர் பாடிய திருமுகப்பா அம்மானை

காப்பு

பார்போற்றும் கம்பர்தமிழ்க்கு அடிமை பெற்ற
பாக்கிய வாசன்
வார்போற்றும் கொங்கையர்வேள் காளிமால் நீள்பழனி
மன்னன் மீதில்
சீர்போற்றும் திருமுகப்பா அம்மானை யெனும்நூல்
தேர்ந்து பாட
கார்போற்றும் திருமேனி அரிமருகன் கரிமுகன்தாள்
காப்புத் தானே.

நூல்

திருமால்

பூமன்னும் செங்கமலப் பொன்மன்னும் சீராளன்
காமன்னும் தெய்வக் கனக பதிபுரந்தோன் 1

குன்றங் குடையாகக் கோவின் குழுக்காப்போன்
கன்றுங் குணிலாய்க் கனிவீழ்ந் திடச்சேர்ப்போன் 2

பாரைப் படைத்தோன்பொற் பாதம் தனில்அளந்தோன்
சீரைப் படைத்தோன் திருவுந்தி பூத்தபிரான் 3

எண்ணயனம் பூண்டிருந்த ஈரிரண்டு கம்மானாம்
பண்ணயனை ஈன்றவுடன் பல்லுயிரு மேபயின்றோன் 4

பாலாழி கைக்கொளுவோன் பன்னகப்பா
யில்துயில்வோன்
ஆலாலின் பச்சிலைமேல் அச்சமறப் பள்ளிகொள்வோன் 5

கஞ்சனுட நெஞ்சதனைக் கையால் பிளந்தெரிவோன்
பஞ்சவர்கள் அஞ்சலெனப் பாரதமு மேமுடித்தோன் 6

வைகுந்த வாசன் மறைதேர்ந் தருள்நேசன்
மொய்குந் துழாயின் முழுமாலி கைமார்பன் 7

பேரெங்கு மான பெரிய திருப்பதியான்
சீரங்க மான தெய்வப் பதிக்கிறைவன் 8

முருகன்

கரியபெரு மாள்தனது கண்குளிர வந்துதித்த
அரிய மருகன்எனும் ஆறு முகதேவன் 9

சீறுமுகச் சூரர்படைச் சேனையெலாம் வேரறுக்க
ஆறு முகமாக அன்றுவந்த காரணிகள் 10

சீரிரும்பொன் னூல்மார்பில் செங்கடம்பந்
தார்புனைவோன்
பேரிடும்பன் சூழ்ந்தபடைப் பெற்றியுள்ளோன்
வெற்றியுள்ளேன் 11

நவவீர வாகுவொடு லட்சம்படை நண்ணிவரப்
பவவீர வாகுவெனப் பங்கமுற்ற சூரர்களும் 12

பூமரமாய்க் காய்மரமாய்ப் பொய்மரமாய் வந்துதித்த
மாமரத்தை யேவகிர்ந்த வைவேல் கரவாகன் 13

சைவகுரு வானதெய்வ சம்பந்த னானகந்தன்
தெய்வ சிகாமணியான் தேவர்சே னாபதியான் 14

ஐந்துகரன் துணைய தாகவந்தீ ராறுகரம்
முந்த உதித்தருளும் மூர்க்க ரணவீரன் 15

குலிசப் படையுடைய கோமான் முருகனுயர்
தலைசைப் பதியான தன்னகர மேநாடி 16

புலவர் தெய்வங்களை வணங்கல்

வந்தும் உயர்தொந்தி வயிற்றானை யைப்பணிந்து
எந்தைபிரா னேயென்று ஏழை மொழிபயின்று 17

அழகுதிரு நாயகிப்பெண் அன்பாக ஓர்பாகம்
பழகும்எங்கள் நாகீசர் பாதம் பணிந்தோங்கி 18

கரியபுயல் மாயவன்தாள் கண்டு பணிந்தருளி
அரியபுகழ்ப் பொன்காளி அம்மன் அடிபணிந்து 19

மெய்ப்பாம் சிவகிரியின் வீதிவல மாகவந்து
நட்பாம் தவமறையோர் நல்லோரை யும்பணிந்து 20

சொற்கோ புரவாசல் தோன்றும் சிவகிரியான்
பொற்கோ புரவாசல் போந்துவலம் செய்தருளி 21

ஏவற் கடவுள் இடும்பன் முதலான
காவற் கடவுள்பதம் கையார வேதொழுது 22

காசிவிசு வேசர்எனும் காரணற்கு மெத்தவிசு
வாசி விசாலாட்சி பதம்வாழ்த்தி மனம்மகிழ்ந்து 23

சீராம் சிவகிரியான் செம்பொற படிவாசல்
நேராய்க் கரம்குவித்து நின்றுதெண்ட னிட்டிறைஞ்சி 24

அய்யன் திருமேனி யழகும் பதத்தழகும்
செய்ய முகத்தழகும் செங்கடிகைப் பொன்னழகும் 25

முருகனிடம் தன் குறை தீர்க்கப் புலவர் வேண்டல்

கண்டுமனம் கூர்ந்துஎந்தன் கவ்வைபல தீரஎண்ணி
பண்டுமொழி தேர்ந்தறியாப் பாலன் சொலும்மழலைச் 26

சொன்னெறிபோல் நன்னெறியும் தோன்றா மொழியாலே
என்னெறியின் சீரே இசைந்த படியாகித் 27

தேவர்க்கு அரியானே தெய்வவள்ளி நாயகனே
மூவர்க்கு அரிதான மூர்த்தியே பார்த்திபனே 28

கங்கைமக னானகந்தா காசிவிசு வேசர்மைந்தா
செங்கைவடி வேற்குகனே தெய்வானைப் பெண்கணவா 29

சேந்தா விசாகா சேவற் கொடியோனே
வேந்தா குருநாதா மென்குறிஞ்சி வாழ்முருகா 30

எங்கும் சரவணனாய் என்றும் இருந்தாய்என்
பங்குஞ் சரவணமாய்ப் பார்த்துவினை தீராயோ 31

திருக்கார்த் திகைப்பாலைச் சென்றருந்த வல்லாய்என்
உருக்காற் றிகைப்பாலை ஒன்றுதலைத் தீர்த்தருள்வாய் 32

காங்கயனாம் என்றீர்இக் கற்றறியா நாயேன்தன்
பாங்கயனாம் என்றுமுந்தப் பாதுகாத் தருள்வாயே 33

செவ்வேளே என்று திருநாமம் பூண்டபிரான்
இவ்வேளை வந்துதவி என்கலியைத் தீர்ப்பாயே 34

ஆறுமுகம் என்றீர்காண் அய்யனே நாயேன்தன்
தேறுமுக மாகவுமே சீர்புரக்க வந்தருள்வாய் 35

கோழிக் கொடிவளர்த்த கோவே அடியேன்தன்
ஊழிக் கொடிவரை ஊண்பால் அருள்வாயே 36

திருவாவி நன்குடிவாழ் தேசிகா நாயேன்தன்
உருவாவி நன்குடிகொண்டு உண்மை பகர்வாயே 37

சோலைமலை மீதிருக்கும் துங்கனே நாயன்இரு
காலைமலை யாமலுமே கண்பார்த் தருள்வாயே 38

திருப்பரங்குன் றத்தூராய் சிற்றடியேன் நித்தமுமே
வெருப்பரங் குன்றத்தூர் மேவி யருள்வாயே 39

ஏரகத்தில் வந்த செட்டியாரே அவியாத
சீரகத்தைத் தந்து திருஞானப் பையருள்வீர் 40

திருத்தணியி லேயிருந்த சேவகனே நீயெனது
கருத்தணியி லேயிருந்த கள்ளம் கவர்வாயே 41

செந்தூர் குடியிருந்த தேசிகா மெய்ஞானம்
தந்தூர் புரந்தருள்வாய் சைவநிலை தந்தருள்வாய் 42

குன்றுதோ றாடல்பயில் கொற்றவா நீயுமென்பால்
நின்றுதோ றாடல்பயில் நிச்சயமே செய்தருள்வாய் 43

கறைசை கொடுமுடியும் காவேரி காஞ்சிநதித்
துறைசெய் வளமுமிகச் சூழ்ந்து புகழோங்கும் 44

அரையவள நாடாளும் அண்ணலே நின்னடியேன்
உரையைவள நாடவுமே உள்ளன்பு இரங்குவையே 45

பொன்னார் இமையோர் புரந்தரனும் போற்றுகின்ற
தென்னார் தலைசைச் சிவகிரியில் வாழ்முருகா 46

பேரார் கவியோரும் பெற்றியுள்ளோர் போற்றுகின்ற
சீரார் தலைசைச் சிவகிரியில் வாழ்முருகா 47

மூவர் புகழ்முனி வோரெல் லாம்புகழத்
தேவர் புகழும் சிவகிரியில் வாழ்முருகா 48

வில்லூர் புனலூர் மின்னூர் வேகதித்த
செல்லூர் தலைசைச் சிவகிரியில் வாழ்முருகா 49

என்று புகழ்ந்தே இருவிழியில் நீர்கதுவ
நின்று தமிழும் நினைவின் படிபுகன்றேன் 50

அன்னேர வேளையிலே ஐயன் சிவகிரியான்
என்னேயென் னேயெனவும் ஏழை மொழிகேட்டுப் 51

பொன்னார் நெடுந்தோகைப் புள்மீது எழுந்தருள
முன்னாரக் கண்டு முறையால் பதம்பணிந்தேன் 52

முருகன் வினவுதல்

ஆர்காண் புலவீர் அறியவே நீயிருக்கும்
ஊர்காணப் பேர்காண உண்மையாய்ச் சொல்லுமென்றார் 53

உள்ளம் மகிழ்ந்தேன் உயர்பூந் துறையில்வளர்
கொள்ளபட்டன் என்றே குறிப்பும் விளம்பியபின் 54

எனவேணும் என்றுமிக எங்கள் சிவகிரியான்
எனவேணும் என்றே தெரிந்து விளம்பலுற்றான் 55

புலவர் வேண்டுதல்

சீர்வேணும் என்றேன்மின் செம்பொன்அணி
வேண்டுமென்றேன்
ஊர்வேணும் என்றேன்பின் உம்பளமும் வேணுமென்றேன் 56

சால்வைசரம் வேணுமென்றேன் தங்கவளை
வேணுமென்றேன்
மேல்வரிசை துப்பட்டியும் மின்தலைப்பா
வேணுமென்றேன் 57

கெட்டிவெட்டுச் சாழிகையும் கீறுமுழை நாகரமும்
கட்டிப் பொன்னாகக் கனமுடிப்பு வேணுமென்றேன் 58

கொட்டைவெட்டிற் செல்லும்புதுக் கோட்டை
வெட்டுச் சேலமெனும்
பெட்டை வெட்டுச் சாழிகையும் பெற்றிபெற
வேணுமென்றேன் 59

கொச்சிவெட்டுச் சாழிகையும் கூடல்வெட்டுப்
பொன்முடிப்பும்
கச்சிவெட்டும் செஞ்சிவெட்டும் கட்டிவிட
வேணுமென்றேன் 60

சன்னமுழை வெந்துருகல் சாழிகையூற் றப்பணமும்
வின்னமழை செம்பிரும்பு மேவுமுழை மெத்தவுண்டு 61

இப்படியே யுற்றபணம் ஈனலுத்தர் செய்ததுவும்
கொப்பறைப்பொன் உண்டுமதைக் குப்பையிலே
விட்டெறிந்தேன் 62

ஆகையினால் செல்லும்பணம் அத்தனை குலப்பணமும்
சேகரமாய் நற்பணமே செய்தனுப்ப வேண்டுமென்றேன் 63

மேற்பசுவாய்க் கொம்படக்கு மெயத்திடக்க
நண்பொடுத்தூர்
பாற்பசுவும் கன்றுகளும் பட்டிரம்ப வேணுமென்றேன் 64

சீரகச்சம் பாக்குவித்துச் சொந்தக் களஞ்சியமொன்று
ஊரகத்தி லேநிறைத்து உண்டுசெய வேணுமென்றேன் 65

சொந்தநவ தானியமும் சீர்களஞ்சி யக்குவையும்
சூழ்ந்திருக்க வாழ்ந்திருக்க துய்யவளம்
வேணுமென்றேன் 66

முருகன் தன் நிலை கூறல்

வேணுமென்று யானுரைத்த மேன்மையெல்லாம்
கேட்டவுடன்
சேணுயர்ந்த மால்தலைசைச் சிவகிரியில் வேலவர்தான் 67

நன்றெனவும் நாடி நகைபுரிந்து மேபார்த்து
இன்றென்னை நாடிவந்தீர் என்பிழைப்புப் பாராமல் 68

உன்பாடு சொல்லி உரைத்ததுவும் நன்றுநன்று
என்பாடு கேட்டவுடன் எல்லாம் தெரிவதுகாண் 69

பாண்டித்துரை யானஎங்கள் பாட்டனார் போனவுடன்
ஆண்டித்தன மாய்ப்பிழைத்தது ஆரும் அறிவார்காண் 70

கண்டிருந்து முன்னம் கதைபேசி னாற்போல
விண்டுநீர் கேட்டபொருள் மேனாளில் உண்டுகண்டாய் 71

அப்பச்சிதன் காலமதில் யார்க்கும் செலவளித்தோம்
இப்பச்செய் காலமெனக்கு இல்லாதது அறியீரோ 72

தந்தை பிழைத்ததுவும் தாயார் பிழைத்ததுவும்
எந்தன் தமையனுமோ என்றும் பிழைத்ததுவும் 73

மாமன் பிழைத்ததுவும் மைத்துணன்மார் வாழ்ந்ததுவும்
நாமும் பிழைத்ததுவும் நன்றாய் எடுத்துரைப்பேன் 74

கேட்டால் தெரியுமிது கேட்டு மிருப்பீர்காண்
நாட்டாண்மை யான தமிழ்ப்புலவீர் தாரணியில் 75

முருகனின் தந்தை சிவபெருமான் செயல்கள்

எந்தன் தகப்பனுமே என்றும் பிழைத்தவிதம்
கந்தை உடுத்தார் கரிக்கூறை கட்டுகின்றார் 76

ஓட்டில் இரந்தார்பின் ஊமத்தஞ் சூடியிடு
காட்டில் நடித்தார்முன் கல்லானை யும்புரந்தார் 77

பாம்பை அணிந்தார் பருக்கச் சடைவளர்த்தார்
தேம்பும் பசியாலே தின்றார் கொடுவிடத்தை 78

பித்தனென்று பேராகி பேய்க்கூட்டத் தோடிருந்தார்
மெத்தச் சிறுமையென வெட்கியே அங்குமிங்கும் 79

காணாம லேதிரிந்தார் கண்ணையன் தேடியுமே
தோணாதென் றார்இதுவும் சொல்வார் பெரியோர்கள் 80

முருகனின் தாயார் பார்வதி செயல்கள்

அன்னை பிழைத்தபிழைப்பு ஆராய்ந்து உரைப்பமென்றால்
என்ன சிறுமையிதை ஏதென் றுரைப்பேன் 81

மலையரச னுக்கு மகளாய் மதுரையில்வாழ்
நிலையரசன் சேயானாள் நீலியென்று பேரானாள் 82

தக்கன்மக ளாய்ப்பிறந்தாள் தந்தைதலை போக்கிவைத்
தாள்
மக்கள்தனில் மூத்தவனை மந்தையிலே விட்டெறிந்தாள் 83

பக்கம் இருந்தவர்கள் பார்த்து மனதிரங்கி
மிக்கபிள்ளை யாரிதுவும் மெய்யெனவே மேதினியோர் 84

எண்ணைவிட்டுப் பால்புகட்டி இல்லிடமும்
கட்டிவைத்துப்
புண்ணியங்கள் வேண்டிப் பொரியும் அவல்பயறும் 85

எள்ளுஞ் செழுங்கனியும் மிக்குடன் உண்டிலிகை
கொள்ளும் பணியாரம் கொடுத்தே வளர்க்கலுற்றார் 86

வாகானை தேரினுடன் வாம்பரியும் கிட்டாமல்
ஆகானை யுற்றான் அதுகுகையில் புக்கதுகாண் 87

முருகன் செயல்கள்

என்னையுமே கங்கையிலே எட்டி எறியலுற்றாள்
பின்னையுமே வெற்பகத்தில் பேராய்க் குடிசமைத்தாள் 88

ஆகாசப் பெண்கொண் டதுவும் கரிக்கோலம்
வாகாசைப் பெண்ணாம் மணமும் இணங்கியபின் 89

வெற்பருகில் வந்ததொரு மின்னாளை யேபார்த்து
அற்புதமாய்க் கொண்டேன் அவளும் குறக்கோலம் 90

கோடு சிறந்தமத குஞ்சரங்கள் மேயுமலை
நாடு கடியாக நண்ணி யிருந்ததனால் 91

வில்வேடர் என்றார்பின் வேங்கைமரம் ஆகுமென்றார்
பல்வேடம் கொண்ட பழங்கிழவ னாகுமென்றார் 92

தளர்ந்த வயதினுடன் தள்ளுநடை கண்டுகண்டும்
குழந்தையென்று பேருமிட்டுக் கூட்டமுள்ளோர்
சொல்லியுமே 93

சக்காந்தம் பேசுதலும் சார்ந்தவரும் சொல்லலுற்றார்
வெங்காந்த மாகியுமே மேதினியில் வந்திறங்கி 94

ஆண்டிமகன் ஆண்டியெனும் ஆதரவு சம்மதித்துத்
தாண்டுமயில் என்னும் தனிப்பறவை மீதூர்ந்து 95

பாரில் இரந்தும் பரந்தும் திரிந்தவுடன்
ஊரில் ஒருவர் உளரால் பிழைத்தனன்காண் 96

திருமாலின் செயல்கள்

முன்மாம னான முறைமையால் அவதரித்த
நன்மாமன் சேதி நவில்வேன் அதுகேளும் 97

மீன்வடிவு கொள்ளலுற்றார் விண்ணா டளவியுமே
வான்வடிவு கொண்ட மடுவில் அவதரித்தார் 98

ஆமை வடிவுகொண்டும் அப்படியி லேதிரிந்தும்
பூமி குடைந்தும் புகும்ஏன மாய்த்திரிந்தும் 99

சிங்க வடிவெடுத்தும் சிந்துரத்தை யேவிழுங்கி
அங்கம் கறுத்தும் அருங்குறளை யாய்த்திரிந்தும் 100

பின்பரசு ராமனென்றும் பேர்பெரிய ராமனென்றும்
மென்வாசு தேவன்என்றும் மேவுகற்கி யாம்எனவும் 101

போத வடிவுகொடு புக்கினதும் போதாமல்
தாத வடிவுகொடு தப்புப் பலகையிட்டார் 102

கிள்நாமம் வைப்பார்பின் கீற்றுநா மம்தரிப்பார்
முள்வாய் அரவின் முதுகில் அவதரிப்பார் 103

ஆலாவி லேறியுமே அவ்விலைமேல் சாய்ந்திடுவார்
பாலாழி மீதில் பதுங்கி யெழுந்திருப்பார் 104

லச்சைக்கு இடமாக நண்ணியுமே என்மாமன்
பிச்சைக்கு இடம்பார்த்துப் பேசித் திரியலுற்றான் 105

மைத்துணர் செயல்கள்

என்மைத் துணராம் இருவர் தனில்ஒருவன்
நன்மைத் தனம்போய் நடுக்கம் பறிந்துவிட்டான் 106

முட்டி யெடுத்தான்பின் முன்றில் தொறும்திரிந்தான்
கட்டி யிருக்கைகுடில் கண்ணாலும் கண்டதிலை 107

பெண்பேச்சை நாவில் பிறங்க அவதரித்தும்
வெண்பாச்சை போலவுமே மேனி வெளுத்தனன்காண் 108

மெய்வார்த்தை சொல்வதிலை விண்ணவரெல் லாம்
பழிக்கும்
பொய்வார்த்தை சொல்வதுமே புத்தி யவர்பிழைப்பு 109

மன்மதன்

ஒருமைத் துணன்பிழைப்பை உள்ளபடி
சொல்வதுகேள்
அரூபத் துடன்திரிவான் யார்க்கும் தெரியாமல் 110

மெய்யா யுதம்படைத்து வெற்றிகொள்ள மாட்டாமல்
பொய்யா யுதம்படைத்தே பூவையர்மேல்
பூசல்செய்வான் 111

காற்றே ரெனவுமிகு கங்குல்மத யானையென்றும்
போற்றித் திரிவான்காண் புன்மதியும் ஆனவன்காண் 112

போக்கறிந்து தானடக்கப் போந்த பரியுமன்றி
நாக்குறைந்து விட்டபரி நண்ணி யதுபடைத்தும் 113

பெண்பழிகள் பூண்டிருந்த பேதமையால் எங்களய்யர்
கண்பழியி னாலே கரைந்தான் அவன்தானும் 114

இன்னபடி யாச்சு எங்கள்பிழைப் பத்தனையும்
சொன்னபடி பொய்யாது சோதித்துப் பார்த்தாலும் 115

முருகன் புலவரை காளியண்ணன் மகன் பழனியிடம் செல்லக் கூறுதல்

ஆகையினால் நம்மாலே ஆதாரம் ஒன்றுமில்லை
ஈகை மிகுந்தருளும் என்னடியான் இவ்வூரில் 116

புண்ணிய வானைப் புகல்வேன் இதுவசனம்
நண்ணி மனதிலே நட்பாக வேகேளும் 117

பழனிமன்னன் சிறப்பு [தசாங்கம்]

அட்ட கிரிக்குமுயர் ஆதி கிரிக்கழகார்
திட்ட கிரியாம் சிவகிரியு மேபடைத்தான் 118

பூவிரியும் சோலை புடைசூழ வேயிலங்கும்
காவிரியும் காஞ்சிநதி கற்புநதி யும்படைத்தோன் 119

சேல்கரையிற் பாய்ந்து திரும்பும் கழனிசெறி
மேல்கரையில் கீர்த்தி மிகும்அரைய நன்னாடன் 120

சித்திரங்க ளேமிகுந்த தேரணியும் தோரணமும்
சத்திரம் சூழ்ந்த தலைசை வளம்பதியான் 121

மேனலம தாகவளர் விஞ்சையோர் சொற்றமிழை
பானலமாம் என்றுபுகழ் பைங்குவளை மாலையினான் 122

பாயும் கதியான பஞ்சகதி யேமுழங்கி
வாயுவின் கதியெனவே வட்டமிடும் வாம்பரியான் 123

எதிர்த்துவரு சத்துரரை எல்லாம் தவிடுபொடி
மிதித்துழக்கி வெற்றிபுரி வீரமத யானையினான் 124

எண்பத்து நாலுலட்சம் என்னும் சராசரமும்
வண்புத்தி கூர்ந்துமிக வாழ்த்துமணி மேழியினான் 125

படைமுரசும் மிக்கான பந்தல் மணமுரசும்
குடைமுரசும் நித்தமுமே கொண்டாடும் முன்றிலினான் 126

பாதாள சேடனுமே பணைமுடிமேல் வைத்தசுமை
ஆதாரம் சாயாமல் ஆதரிக்கும் ஆணையினான் 127

சைவக் குருபாதம் தாழ்ந்து வணங்கியுமே
செய்வற்கந் தப்பாத் திருஞான போதமுளோன் 128

வேளாளர் சிறப்பு

முன்னாடை கீறி முளைச்சிலந்தி காட்டுதற்குப்
பொன்னாடை கீறிப் புகழ்படைத்த வேளாளன் 129

பழையனூர் நீலி பழிக்கா எழுபதின்மர்
விழையுந்தீ மீதினிலே வீழ்ந்து பழிதீர்ந்தோன் 130

கம்பர்க்கு அடிமைமுறி கையால் எழுதுகின்றோன்
வம்பர்க்கு அடங்காத வாள்வீம னாகவந்தோன் 131

பையரவின் வாய்மணியைப் பாவலற்கு நீட்டியுமே
வையகமும் வானுலகும் வாழ்த்தும் புகழ்படைத்தோன் 132

பழனிமன்னன் பெருமைகள்

மன்னு சுபைகர்த்தர் மகிழ்வாய் அருகில்வைத்து
இன்னிலத்தில் மிக்கோர் யாரும் புகழ்ந்தருள 133

விஷ்ட்ணுபத சேகரனாம் வேதியர் குலாதிபனாம்
கிஷ்ட்டண மகராய மகீபன் மகிழ்ந்தழைத்துப் 134

பொன்னின் சரப்பணியும் பொற்கடகம் சாலுவையும்
துன்னும் குதிரையுடன் சூரியபாண் தீவட்டியும் 135

மேல்வரிசை துப்பட்டியும் மிக்காய் அருளவும்செங்
கோல்முறையு மேசெலுத்தும் கோமான் உயர்சீமான் 136

பாரைப் புரந்தருளும் பார்த்திபரெ லாம்வணங்கி
கூறையென வாழ்த்தும் குலத்தில் அவதரித்தோன் 137

தந்தை காளியண்ணன்

ஆயி வசீரன் அருள்காளி ஈன்றருளும்
சேயன் புவியில் சிறந்த கனயோகன் 138

நண்பாம் குணவாய்மை நண்ணியே நாவலர்க்குப்
பண்பாம் குடைநீள் பழனி எனும்பெயரோன் 139

குடிபடையும் நாட்டவரும் கொண்டாட வேயதிக
படிமுழுதும் காத்த பழனி எனும்பெயரோன் 140

தம்பியர் நால்வர்

காழியுடன் நல்லய்யனைக் கான்றமுத்து வேலனையும்
வாழி திகழ்முத்துக் குமாரனுடன் நால்வரையும் 141

தம்பி எனப்படைத்த தாட்டீக கெம்பீரன்
அம்புவியில் தன்மன்என அன்பாக வந்துதித்தோன் 142

மாமனார்

பூந்துறையி லேவாழ்வு போந்த அவிநாசி
வேந்தனுக்கும் நல்லய விவேகனுக்கும் மிக்கான 143

அன்பன் எனவந்த அழப்பித்தான் முத்தயனூடு
இன்பமிகு நஞ்சைய வேளுக்குநல் சீர்மருகன் 144

சகலைகள்

நான்மறைதேர் வெள்ளோடை நண்பன்எனும் ராசனருள்
மேன்மைதிகழ் கின்றமுத்து வேலஒய் யாரனையும் 145

நசையனூர்க் கண்ணகுல நாகரிகன் குப்பன்அருள்
இசையும் பிறப்பனையும் இன்பாம் எழுமாதை 146

மன்னன் பனைங்காடன் வாரண வசீரன்அருள்
தென்னன் எனவாழும் தெய்வ சிகாமணியைப் 147

புகலு முறைதான் புவிமேல் தழைத்தோங்கும்
சகலன் எனப்படைத்த சற்கார விற்காமன் 148

பழனி மன்னன் தன்மைகள்

சொல்லில் அரிச்சந்திரன் சோமன் அபிராமன்
வில்லில் விசயன்எனும் வேந்தன் குணசாந்தன் 149

தன்ம குணநேயன் சங்கீத கோலாகலன்
மென்மையுள தூயன் வித்தை சனாதரவான் 150

எங்கள் மடப்பளியும் எய்தும்அபி ஷேகமதும்
பொங்கு மடப்பளியும் பொன்னணியும் தேரணியும் 151

நித்தப் படியும் நிறைதூப தீபமுடன்
வைத்துப் படியளக்கும் மன்னியசற் காரமுளோன் 152

அறிவும் பொறையும்மிக ஆராய்ந்து நேராய்ந்து
வறிஞர்க்கு உதவுகொடை வள்ளல் பழனியிவன் 153

ஆர்க்கும் உபகாரன் அன்பும் பெரிதான
தீர்க்கப் பழனியிவன் தென்பழனி வேல்முருகர் 154

முருகன் புலவருக்குத் திருமுகம் தரல்

பேராம் பழனிமிகு பெற்றிபெறு கூறைகுல
மேராம் பழனியெனும் வேந்தனுக்கு மேயெழுதி 155

நன்றாய்த் திருமுகமும் நான்செய்வேன் காண்புலவீர்
என்றார் உடனே எழுதிக் கொடுக்கலுற்றார் 156

திருமுகம் பெற்ற பழனிமன்னன் செயல்

கொடுத்தார் சிவகிரியில் கோமான் முருகேசர்
தடுத்தா தரிக்கவுமே தந்த திருமுகமும் 157

வாங்கி முடிமீதில் வைத்தே வழிதேடி
ஓங்கும் புகழ்த்தலைய நல்லூர்வாழ் பழனிமன்னன் 158

தன்பால் கொடுபோய்ச் சமய மதுபார்த்து
முன்பாய்க் கொடுத்தேன் முறையால் எழுந்தருளி 159

இருகரமும் கூப்பியுமே ஏந்தி மிகவாங்கிச்
சிரசில்வைத்துக் கண்மலரில் சேர்த்தி நறுந்தூப 160

தீபமிட்டும் பூமாலை செண்டுமலர் சூட்டியுமே
ஞாபகமுற் றேவிரித்து நன்றா யதுபார்த்து 161

பார்க்குமிரு கண்குளிர்ந்து பால்போல் மனம்குளிர்ந்து
தீர்க்கமுடன் என்பால் திரும்பி முகம்பார்த்து 162

புலவருக்கு உபசரிப்பும் கொடையும்

வாரும்புல வீர்எனவும் மாமுடிமேல் கைகூப்பி
ஆரும் அதிசயிப்ப அன்பாய் உபசரித்து 163

இருக்கும் விடுதியுமே ஏற்கை யுடன்கொடுத்து
மருக்கமழும் தோரணமும் வாசல்தொறு மேநிறைத்துச் 164

சம்பா அமுதும் சமைத்துக் கறிசமைத்துக்
கும்பாத பாலின் குழம்பும் செழுங்கனியும் 165

தேவர்க்கு உகந்தருளும் தெள்ளமுத மும்தேனும்
மாவர்க் கமும்வடகம் வைத்தே விருந்தளித்துச் 166

சாளிகையும் மேகலையும் சால்வை சரப்பணிபொன்
நாழிகையி லேதுலங்க ஐவிரற் கும்பதித்து 167

காதில் சவுக்கொளியும் கைக்கேடய மும்கொடுத்து
சாதியிற் சிறந்தகுணம் சார்ந்தபரி தான்அருளி 168

மேல்வரிசை மெத்தமெத்த வேண்டும் பரிசுதந்தும்
பால்மிகவு மேகறக்கப் பண்பாய்ப் பசுக்கொடுத்தும் 169

இன்னும்என்ன வேணுமென்று எங்கள் பழனிமன்னன்
கன்னனைப் போலவுமே காராளர் தன்குலத்தில் 170

வெண்ணைநல்லூர்ச் சடையன் மேன்மையைப்
போலவுமே
அண்ணஆ லஞ்சேரி அயிந்தனைப் போலவுமே 171

சந்திர வாணன் தகைமையது வாம்எனவும்
கொந்தலரும் தண்டார்க் குடிதாங்கி யாம்எனவும் 172

திருப்பனந்தாள் பட்டர்தரும் செய்கையது வாம்எனவும்
சுருப்புலவும் தாமமணி சோமன்இவ னாம்எனவும் 173

பஞ்ச பிலத்தில் பயங்கரனே யாமெனவும்
நெஞ்ச மிரங்கியுமே நீகேளும் என்றளவில் 174

புலவரை ஆதரித்தோர்

பழைய கோட்டையார்

ஏர் விளம்பிப் பஞ்சம்முதல் எட்டுவரு ஷம்வரை
ஊர்விளங்கும் சர்க்கரைதான் உண்மையுடன் வளர்த்து 175

எனக்கும் வதுவையது இன்பாகச் செய்தருளி
கனக்கும் புகழ்படைத்தான் காங்கயநன் னாடதிபன் 176

பூந்துறையார்

கீலக சவுமியத்தில் கீர்த்திபெறும் பூந்துறையில்
சீலன் அவிநாசி தீரன் எனைப்புரந்தான் 177

வெள்ளோட்டார்

நளவருஷம் தன்னில் வாரண வாசிமன்னன்
வளவன்வெள் ளோடைநகர் வாழும் கவுண்டயனும் 178

விசயமங்கலத்தார்

அன்பாய்க் கொடுத்தார்காண் ஆகையி னாலொருவர்
பின்போகா மல்நான் பிழைத்தேன் அதன்பிறகு 179

பிங்களம தான பிளப்பஞ்ச காலமதில்
மங்கைவளர் கரிச்சி மன்னன் புரந்தனன்காண் 180

பூந்துறையார்

பத்தேசம் கனகலகம் பாராமல் மீறுஅழப்
பித்தான் அவிநாசி பேராகக் காத்தனன்காண் 181

வட்டிக் கடன்வாங்கி மாதச் செலவுதந்து
கெட்ட சுரம்போகக் கீர்த்தி படைத்தனன்காண் 182

நல்லயயன்சே யாகவந்த நண்பன்அவி நாசிமன்னன்
இல்லம் புரந்தான்காண் என்வயிற்றிற் போக்ககல 183

மருந்தும் கொடுத்தான்பின் மாதச் செலவறிந்து
விருந்தும் கொடுத்துமெந்தன் மெய்வினையும்
தீர்த்தனன்காண் 184

தெய்வானையம்மாள்

செல்லனருள் நல்லயன்தன் தேவிதெய்வ யானையம்மன்
அல்லும் பகலும் அறம்வளர்த்த மாதெனவும் 185

வந்தபஞ்ச காலமதில் வர்க்கவகை யூடமுது
தந்தும் எனக்கதிக தாயாகச் செய்தனள்காண் 186

பழனியம்மாள்

மாரிவிளை யாட்டெனது மைந்தர்எழு வற்குகந்தாள்
ஊரில் ஒருவர் உதவாப் படைமுனையில் 187

வாரண வாசியெனும் மன்னனுமன் னோன்மனையில்
சீருயரும் செல்வி திருப்பழனி மாதாஎன் 188

வருத்தம் அறிந்துகுளி வாய்பிடுங்கிக் கம்புமிகு
எருத்தேர்வை மாதம்ஒன்றில் ஏழரை மிடாச்செலவும் 189

மேற்செலவும் வர்க்கவகை மெய்ப்பாம் கறிசமைத்துச்
சீற்சிலவாம் அன்னமிட்டுச் சீர்த்தி படைத்தனள்காண் 190

பச்சையம்மாள்

அப்பச்சி ராயன் அகமுடையாள் ஈஞ்சையில்வாழ்
மெய்ப்பச்சை அம்மன்எனை வீயாமல் காத்தனள்காண் 191

காழி நகரார்

பஞ்சமென்று பாராமல் பாலமுத மும்கொடுத்தான்
நஞ்சயனென் போன்காழி நன்னகர்ப்பிள் ளான்பாலன் 192

காடையூரார்

காடைப் பதிவாழ் கவுண்டயனென் போன்எனது
வேடை யறிந்து விருந்துசெய்து காத்தனன்காண் 193

பூந்துறையார் – வெள்ளோட்டார்

பூந்துறையில் வாழும் புகழ்வா ரணவாசி
வேந்தன் வெள்ளோடை விளங்கும் கவுண்டயனும் 194

சால்வை கொடுத்தார் சரப்பணியும் செய்துமெந்தன்
பால்வெற் றிலைமடித்தும் படிக்கம் பிடித்தனர்காண் 195

அன்பாம் வெள்ளோடை அதிபன் திருமலைமால்
முன்பாய்த் திருமுகப்பா மொழிந்ததுவும் கேட்டெனது 196

தோன்றல்மணம் மூன்றுசெயச் சொன்னசெல
வும்கொடுத்து
மூன்று வருஷம் முசியாப் படிகொடுத்தும் 197

இன்னமுமென் வீட்டினிலே எய்தும் செலவறிந்து
அன்னம் தருவன்என்றே ஆதரவு சொல்லலுற்றான் 198

தாயுமான பிள்ளை

தாயுமாம் பிள்ளையெனும் சற்காரன் என்னுடைய
தாயுமாம் தந்தையெனும் தன்முறைய தாகியுமே 199

கேட்ட செலவுடன்யான் கேளாச் செலவுமெந்தன்
வீட்டிற் செலவும் விசாரித்துச் செய்யலுற்றான் 200

தாது வருஷம்எனும் சாமமதில் என்வீட்டில்
மாதச் செலவும் வருஷாந் தரச்செலவும் 201

இச்சித்த காரியங்கள் என்னபொருள் கேட்டாலும்
நட்சத்திரம் போலவுமே நகைபுரிந்து செய்தனன்காண் 202

இப்பவும்என் வீட்டில்விளக் கேற்றிவைப் பதும்
அவன்தான்
கைப்பொருள்அல் லாது மற்றும் கைகாட்டு
வார்அரிது 203

இராம வண்ணான் சலவை

மெத்தப் புகழ்படைத்தோன் வீரகநல் லூர்க்குருவன்
புத்திரன் இராமவண்ணான் போற்றும் தமிழ்க்கிரங்கி 204

மெத்தச் செலவுதரும் வேந்தருக்குச் செய்வதுபோல்
நித்தச் சலவைதந்தும் நிட்சேபம் செய்தனன்காண் 205

இந்தவகை யாகவுமே என்சமயம் கண்டுகண்டே
தந்தா தரித்தார் தமிழுக்கு இரங்கியுமே 206

பஞ்சம் வந்தது

வெகுதா னியவருஷ மிதில்மெத்த வேவிளைந்து
வெகுதானி யங்களும்என் வீடுரம்பு மென்றிருந்தேன் 207

பட்டதுவும் கெட்டதுவும் பலதானி யங்கள்விரை
இட்டதுவு மேபலன்வந்து எய்தாக் கொடுமையினால் 208

செய்வார் அரிதுமெந்தன் செந்தமிழ்கேட் பார்அரிது
இவ்வேழை சோற்றினுக்கும் இல்லாச் சமயமதில் 209

மாடை வராகனையும் வாரிக் கொடுத்தாலும்
வேடை தொலைந்து விடாய்தீர மாட்டாது 210

மாதச் செலவு வருஷாந் தரச்செலவும்
போதத் தவசம் பொதிபொதியாய் வேணுமென்றேன் 211

அப்படியே மாதம் அறிந்துமன தின்படியே
நெற்பொதியும் தானியமும் நினைந்துமிக
வேகொடுத்தான் 212

பாலும் ஒருவாய் பழமுமொரு வாயருந்தி
நாலு திசையறிய நண்ணுகன பாக்கியவான் 213

வள்ளல் பழனி மகராய னைத்துதித்து
உள்ளம் மகிழ்வாகி வாழ்ந்திருந் தனனே. 214

வாழ்த்து வெண்பா

தலசைநகர் வாழ்கூறை தன்குலத்தில் யாரும்
நலசெல்வ மாகவும் எந்நாளும் - இலகுபுகழ்
காளி மகீபன் கதிக்கும் பழனிமன்னன்
வாழிநீ டூழி மகிழ்ந்து.

5. தலையநல்லூர்க் கூறைகுல நாட்டிமைக் குமார சின்னைய கவுண்டர் பேரில் தனிப் பாடல்கள்

1\. அகிலமதில் பொன்னிமுன் எழுநூற்று ஆண்டதாம்
அன்றுமே பாண்டுவனமாம்
அடிக்காயி ரஞ்சிவ இலிங்கமது உள்ளதாம்
அரியயன் தேடுபரனாம்
அதிகதென் கறைசைதனில் மகுடேசர் வடிவுடைய
அம்மனும் மால்தேவரும்
அட்டதிசைப் பாலரும் காரணம் விளங்கவும்
அபிடேக கட்டளைகளும்

புகலரியநந்தா வனங்களும் அரையநா டதனிலே
புஞ்சையும் தேவதாயம்
புதியசந் திரன்இரவி யுள்ளவரை செய்துமே
போகன்என வந்ததுரைநீ
பொன்காளி அம்மைதன் கெற்பகிரி அர்த்தகிரி
புனிதவா கனமண்டபம்
பொங்கமிகு செங்கல்லால் ஆனையும் வாசியும்
புகழ்பெறச் செய்ததருநீ

குகமுருகர் சிவகிரிக் குமாரர் மதில்வடிவு
கொண்டகோ புரசிகரமும்
கூறரிய வெண்சுதை அலங்கார மும்நல்ல
குலவுபணி விடைகள்செய்து

குன்றெடுத் தாக்கிரமிடு அநுமந்த ராயரிட
கோயிலும் பிரதிட்டையும்
கொண்டகலி யுகவரதர் கோவில்முன் கம்பமும்
கோட்டையும் பிரவாகமும்.
அகநளின மிருதுவசன மேரெனச் செய்துநீ
தோறாத கீர்த்திபெற்றாய்
சொல்லரிச் சந்திரன்நீ கூறைகுல மேருநீ
துலங்குசெங் குவளைமார்பா
துரைராசர் மகிழவரு குமாரச்சின் னய்யனும்
சொல்காளி அத்தியணனும்
தூயன் குழந்தைவேல் தனைமைந்தர் எனஉதவும்
துரைகுமாரச்சின் னேந்திரதருவே.

2. அன்றரசு சோழன்முன் கம்பர்தமை மாமனென்று
அழைத்தமுறை தவிறாமலும்
அரையநாடு அரசுபுரி காளியண ராயனும்
அன்புமிகு பரியாசமாய்
அதிகநல புலவரென்று எனதுமுன் சொல்கிறீர்
அட்டதிசை தன்னில்மெய்ப்பாய்
அரசர்முன் வரிசையும் வெகுமதிகள் பெற்றதும்
அறிவமோ எனநகைக்க
நன்றுநன் றென்றுமே பொன்காளி பாதமதை
நயமுடன் துதிசெய்துமே
நாவலர்கள் பாளையப் பட்டில்வளர் சாமைய
நாயக்கர் சமுகமதனில்
ராசனைக் கண்டுதமிழ் கூறவும் பட்டத்து
ராசதுரை யேபிறந்தான்
நாட்டில்வளர் புலவரிட செயலென மகிழ்ந்துமே
நல்வரிசை வெகுமதிகளும்

என்றுமே நிலம்வயல் புஞ்சைமா னியநீட
இருந்தனரீ ராறுதிங்கள்
இந்திரதரு காளியண ராயன் விசாரித்து
இதுசேதி தனையறிந்து
எனதுகவி நாவலன் மறுதேசம் அதனிலே
இருக்கவும் ஞாயமுண்டோ
என்றுநா டனைவரும் கோனேரி முதலியார்
இதுசேதி நினைவுவைத்து
வென்றிபுனை காளியண ராயனும் தயவதாய்
மெய்ப்புடன் சர்வமான்யம்
மிடாரெண் டுடன்சிலா சாசனம் செய்தனர்
விளங்குமதி இரவிஅறிய
வித்வசனர் மானிபம் பரிபால னம்செயும்
மேருநீ கூறைகுலனே
விசயன்நிக ராகிய குமாரச்சின் னேந்திரனே
வீரலட் சுமிவாசனே.

3. செகராசர் மெச்சவரு மைசூர் சமஸ்தானம்
செல்வபாட் சாவுமெச்சும்
திறமைமிகு நூருமன்மதசாய்பு அன்னையன் குப்பையன்
செல்வவெங் கிடேசமுகிலும்
அகமகிழ்ந் தானந்த வருஷமது ஆனியில்
அன்புவைத் துனையழைத்து
அருமையொடு சோடுசா லுவைகுதிரை தீவட்டி
அணிபெற்ற சூரியபடமும்
மிகுபுகழ தாகவரு பொன்காளி செயலினால்
மேன்மையொடு வரிசைபெற்றாய்
மேலரைய நாடனே கூறைகுல மேருவே
மேழியின் விருத்தீபனே

பகைவரை வென்றதுரை குமாரச்சின் னையன்உதவு
பாலனே கனயோகனே
பாவலர்கள் புகழவரு குமாரச்சின் னேந்திரனே
பகரரைய வளநாடனே.

4. போசநள ராசர்நிகர் காளியண ராயனும்
பொன்காளி கிருபையதனால்
பொன்மாது சேர்கனக தண்டிகைத் துரையரசு
புரியும்அன் னாளில்முதலாய்

வாசமிகு நமதுபெரி யோர்கள்முறை தவிறாமல்
வாணர்மேல் தயவுவைத்து
வதுவைவரி ஐந்துபடி நிலைசெய்து நாட்டினில்
மானிபப் புஞ்சையுதவிக்

காசினியில் உயர்கீர்த்தி யாய்த்தமது சேயனைக்
கார்த்தவரை தவறாமலே
கவிவலர்கள் மீதினில் பட்சம்வைத் தேலட்சி
கர்னாவ தாரமுகிலே

தேசுலவு அரையநா டாதிபதி கூறைகுல
தீரஅபி ராமசோமா
தென்னவன் எனும்குமாரச் சின்னைய வசீரனருள்
சின்னைய நராதிபதியே.

5. சீர்கொண்ட மைசூர் சமஸ்தான மதனிலே
செகராசர் பணியவந்து
சிங்களர் தெலுங்கரொடு கொங்கணர் மராடரும்
சீனகர் கலிங்கர்வடுகர்

பார்கொண்ட மலையாளர் சேரதே சத்தவரும்
பாண்டியதே சங்களின்னம்

பகருதற் கெளிதான சோழதே சத்தரும்
பண்புடன் நிரையில்நின்று
பேர்கொண்டு வாழ்த்திப் பராக்கென்று சொல்லவும்
பெருமையுடன் வீற்றிருந்தார்
பிறதெட்சண பாட்சாவும் மெச்சும்உச் சிதரான
பேரான மீருசாயபு
தார்கொண்டு மனமெச்சி வருதலைசை கூறைகுல
தருகுமா ரச்சின்னையன்
தந்தருள் சுதாகரன் குமாரச்சின் னேந்திரனே
தமிழரைய வளநாடனே.

6. அண்டர்பர வியபதத்தாய் செகத்தாய்ஞானத் தரும்பொருளே
எவ்வுயிர்க்கும் உயிராய்நின்ற
கொண்டல்வண்ணன் சோதரியே பொன்காளித் தாயே
எனதுமொழி கூறக்கேண்மோ
தண்டமிழோர்க்கு உபகாரன் கூறைகோத்திரன் தலைசைநகர்
முத்தயன்சொல் தனயனான
மண்டலமென் குமாரச்சின்னைய வேள்யோகம் வளர்ந்தேற
இனியவரம் அருள்செய் வாயே.

7. அனுதினமும் மனதிலுனை நினைப்பவர்கள் கலியகற்றும்
அம்மே உந்தன்
பனுவலெனும் தமிழ்க்கிரங்கும் பொன்காளி நாயகியே
பகரக் கேண்மோ
தனுவிசைய னாகவந்த கூறைகோத்ரன் தலைசைநகர்
முத்தயன்சொல் தனயனான
மனுபதிகுமாரச் சின்னையவேள் யோகம் வளர்ந்தேற
இனியவரம் அருள்செய்வாயே.

௮. கோடார்பூந் தென்தலைசைக் கூறைகுல மேலரைய
நாடாளும் வேந்தனெனும் நாகரிகா - தாடாண்மை
தென்னவன் குமாரச் சின்னையவேள் பெற்றதுரை
சின்னையபூ பாலா செயம்.

௯. வாகாதென் கூறைகுல மார்க்கண்ட னேபுகழ்சேர்
நேகா குமாரச்சின் னேந்திரனே - மாகநகர்
குன்றும் கடலும் குலகிரிகள் உள்ளமட்டும்
என்றும் சுகமே இரு.

6. தலைய நல்லூர்க் கூறைகுலப் பழனிக் கவுண்டர் பேரில் விருத்தம்

1. அகிலமிசை கலியுகம் நாலாயிரத் தெண்ணூற்
றன்பதுடன் ஒன்பதின்மேல்
ஆகியபிர மாதிவரு ஷத்தினில் தைத்திங்கள்
ஐமூன்று நாளதனிலே

மகிழ்கின்ற பொன்வாரம் இனியசுப யோகமும்
வந்தருள் முகூர்த்தமதிலே
மைசூர்ச் சமஸ்தானம் உயர்விசைய மங்கையினில்
மன்னுசுபை கர்த்தனானோன்

திகழ்தொண்டை நாடனுயர் வடிவேல் முதலியார்
செயமாக உனைஅழைத்தே
திறமான பல்லக்கு மேல்வரிசை பலவுமே
செய்தருள வரிசைபெற்றாய்

புகழ்பரவு தலைசையில் கூறைகுல மால்காளி
பூபதி தருங்குமாரா
புண்ணிய சதுரனாம் பழனிமகி மாதிருப்
பூவுலகில் வாழிநீயே!

2. ஆதியாம் நற்கீசர் அருளினும் மலைமங்கை
அழகுதிரு நாயகிதரும்
அன்பினும் கரியமால் வரந்தரு தயவினும்
ஆயிபொன் காளியம்மன்

பாததய வினும்இனிய சிவகிரியில் வேலவர்
பண்புலவு கிருபையாலும்

பாக்கியமிகு தொண்டைவள னாடன்வடி வேல்துரை
பட்சமுற்று உனையழைத்தே

நீதிபரன் நீயென்று கனகபல் லக்குடன்
நிறைவரிசை யதுபடைத்தாய்
நீடூழி காலமும் கீர்த்திமா றாமலே
நிலைமையுட னேவாழ்குவாய்

மேதினியில் உயர்கூறை கோத்திரனே தலைசையினில்
மேவுதுரை யாயிஅருளும்
வெற்றிதிகழ் காளிதரு பழனிமகி பாபுண்ணிய
மிகும்அரைய வளநாடனே!

3. வடிவுடைய மங்கைபங் காளர்மகு டேசரும்
மலையமா தங்கிஉமையும்
மன்னுவிசு வேசரும் நற்கீ சுரத்தரும்
மால்கரிய வரதர்தாமும்

அடியவர்க்கு அன்புறு விசாலாட்சி யம்மனும்
அழகுதிரு நாயகியுடன்
ஐங்கரக் கடவுளும் பொன்காளி யம்மனும்
அதிகசிவ கிரிவேலரும்

படிமீதில் நின்னுடைய பங்கிலக லாமலே
பாக்கியம் கனயோகமும்
பரிவாக வேதந்து மன்னர்மன மெய்க்கவும்
பட்சம்வைத் தாள்வர்கண்டாய்

நடனபரி நகுலனே தலைசையில் கூறைகுல
நற்காளி பூபன்மைந்தன்
நளபோசன் நிகரான பழனிமக ராசனே
நம்பினோ ரிடதம்பமே!

7. கூறைகுலப் பழனிக் கவுண்டர் மனைவி சின்னம்மன் பேரில் கலித்துறை

1. பூமாது வாகவும் பாரதி யாகவும் பொன்மலையில்
கோமாது வாகவும் நீசெனித் தாய்இக் குவலயத்தில்
காமாவ தாரன் தலைசையில் வாழ்வுயர் காளிதரு
சீமான் பழனி மகீபுன் மனையினில் சின்னம்மனே.

2. ஆரும் புகழவும் அன்னமும் சொன்னமும் ஆதுலர்க்கு
நேரும் திருவென நீசெனித் தாய்நின் நிகருளதோ
கூறை குலத்தினில் காளி மகீபன் கொடுத்தருள்வ
சீரன் பழனி மகீபுன் மனைவளர் சின்னம்மனே.

3. காயும் கறியொடு அன்னமும் சொன்னமும் கற்றவர்க்குத்
தாயின் பரவுகொடு ஈதல்கற் றாய்தென் தலைசைவளர்
ஆயி மகீபன் தருகாளி ராயன் அருளில்வந்த
சேயன் பழனி மகீபன் மனைவளர் சின்னம்மனே.

4. போர்ந்த தயவி னுடனே யெவர்க்குநற் போசனமும்
ஈந்துமென் மீதினும் பேர்படைத் தாய்உன் இணையுளதோ
பூந்துறை யான்அவி நாசி தரும்செல்வி யேபுகழே
தேர்ந்த பழனி மகீபன் மனையினில் சின்னம்மனே.

5. பாரேழும் போற்றவும் காசிக்கும் சேதுக்கும் பாக்கியத்தால்
பேராண்மை யாம்அவி நாசி மகிபதி பெற்றமின்னே
தாராளன் என்று நரவா கனம்பெற்ற தாட்டிகம்சேர்
சீராம் பழனி மகீபன் மனையினில் சின்னம்மனே.

6. மருவாரும் சிவகிரி வேலர்பொன் காளி மகிமையினால்
பெருவாழ்வும் செல்வமு மாறாம லேபெற்றுப் பேர்பெறுவாய்

தருவாழ் தலைசையில் காளி மகீபன் தவத்தியென்றும்
திருவாழ் பழனி மகீபன் மனையினில் சின்னமனே.

7. பாவலர் போற்றிய நல்லையன் தேவிநின் பாட்டியென்னும்
தேவம்மன் போலவும் கீர்த்திபெற் றாய்கொங்கு தேசமதில்
யாவரும் மெச்சும் நரவா கனப்பிர பாகிவளர்
சீவக னான பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

8. கவிவாணர் போற்றிய பூந்துறை மேவிய காடைகுல
அவிநாசி ராயன் தரும்செல்வி யேயுன் அறிவுளதோ
குவியா மலர்க்கரன் தென்தலை சைப்பதிக் கூறைகுலன்
சிவனேச னான பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

9. காற்றைப் பிடித்துக் கரகத்தில் விட்ட கதையெனவே
ஏற்றஎன் வீட்டில் செலவாகும் மாசம் இரண்டுபொதி
சோற்றுச் செலவுக்கும் தேர்ச்செல வுக்கும் துணைசெய்குவாய்
சீற்றலர் போற்றும் பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

10. பார்பெற்று வாழிநற் பொன்காளி யம்மைதன் பட்சமென்றும்
நேர்பெற்று வாழி சவுபாக் கியமும் நிறைந்துமிகும்
பேர்பெற்று வாழி பிறையாயி ரம்தொழு தேபிழைத்துச்
சீர்பெற்று வாழி பழனிமன் னன்மனைச் சின்னம்மனே.

(குண்டடன் சென்னிய கவுண்டன்வலசு புலவர் வீட்டுப் பிரதி)

குலகுருவும், குலதெய்வமும் ஒருங்கே பவனி வருதல்

அருள்மிகு பொன்காளியம்மன் தேர்த்திருவிழா, தலையநல்லூர், சிவகிரி.